# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாதஇதழ்

Tamil Monthly

மலர்: 01 | இதழ்: 01 | நவம்பர் 2022 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை

Volume: 01 | Issue: 01 | November 2022 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai



## கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வாருங்கள்:

## பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை

www.penakural.com

### சனாதன தர்மம் என்றால் என்ன?






हरिः सर्वोत्तमः।                ॥श्रीः॥                वायुः जीवोत्तमः॥
श्रीमन्मूलरामो विजयते॥   जगद्गुरुश्रीमन्मध्वाचार्य मूलमहा संस्थान   श्री गुरुराजो विजयते॥

ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமி பக்தர்களுக்கு ஓர் நற்செய்தி

## An Appeal to the Devotees of Sri Raghavendra Swamiji



NANJANGUD SRI RAGHAVENDRA SWAMY MUTT (MRUTTIKA BRINDAVANA SANNIDHANA)

## "DAKSHINA MANTRALAYA"

7/13, T.P. KOIL STREET, TRIPLICANE, CHENNAI - 600 005. ☎:044-28440528

## ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமி பக்தர்களுக்கு ஓர் நற்செய்தி !

### "தானத்தில் சிறந்த தானம் பூ தானம்"

என்பது ஆன்றோர் வாக்கு - ஒரு தனி மனிதனுக்கு பூ தானம் செய்தாலே தானம் செய்தவனின் ஏழு தலை முறைகளுக்கும் புண்ணியம் சென்று அடையும் என்றால், ஒரு யதிகளுக்கு, அதிலும் ஸ்ரீ கலியுக கல்பதரு என்று பிரஸித்தியான ஸ்ரீ குருராஜருக்கு பூதானம் செய்தால் அதனால் ஏற்படும் புண்ணியத்தை என்னவென்று சொல்லுவது.

**"யதிர் யத்ர க்ருஹே புங்தே தத்ர புங்தே ஹரிஸ்வயம் !
ஹரிரியத்ர க்ருஹே புங்தே தத்ர புங்தே ஜகத்ரயம்" !!**

எந்த ஒரு இடத்தில் யதிகள் உணவு அருந்து கின்றாரோ அங்கு ஸாக்ஷாத் ஸ்ரீ ஹரியே வந்து உணவு அருந்துவதர்க்கு சமம். எங்கு ஸ்ரீ ஹரியே உணவு அருந்துகின்றாரோ அங்கு மூன்று உலகமுமே உணவு அருந்தியதற்கான புண்ணியம் கிட்டும் என்றால் ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்த்ரருக்கு நித்யப்படி பூஜை, பாராயணம், நைவேத்யம், அன்னதானம், முதலான நற்காரியங்கள் செய்ய ஒரு சிறந்த இடத்தினை கட்டி தந்தால் அது எப்பேற்பட்ட புண்ணியத்தை தரும் என்று எவராலும் சொல்லிட இயலாது. அப்படி நம்மால் ஒரு கட்டிடம் (பவனம்) கட்டித்தர இயலுமா என்றால் அது முடியும் என்று எல்லா பக்தர்களுக்கும் இந்த புண்ணியம் கிடைக்க செய்கின்ற வழியில், அதுவும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதியின் ஸன்னிதானத்தின் மிக அருகாமையிலுள்ள **ஸ்ரீ தக்ஷிண மந்த்ராலயம்** என்று பிரஸித்திப் பெற்ற ஸ்ரீ மடத்தின் பின்புறத்தில் பக்தர்களுக்காக பூஜா மண்டபம், த்யான மண்டபம் மற்றும் அன்னதானக்கூடம் கட்ட உத்தேஸித்து ஸ்ரீ ஸ்ரீ ஸுயதீந்த்ர தீர்த்தரின் அருளாசிபெற்ற ஸ்ரீ ஸ்ரீ 1008 ஸ்ரீ ஸுபுதேந்த்ர தீர்த்தரின் ஆக்ஞையின் பேரில் கட்டிடம் கட்டும் திருப்பணி நடைபெற்று வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### ! தர்மோ ரக்ஷதி ரக்ஷிதஹ : !

| | |
|---|---|
| சுமார் 12,000 சதுர அடியில் கட்டிடம் கட்டுவதற்காக ஆகும் செலவு (அதாவது **தியான மண்டபம்**, **பூஜா மண்டபம்** மற்றும் **அன்னதானக்கூடம்**) | **ரூ.3 கோடி** |
| **ஒரு சதுர அடிக்கு ஆகும் செலவு** | **ரூ. 2,500/-** |

ஆதலால் பக்தர்கள் தங்களுடைய சக்திக்கேற்றபடி தாராள மனத்துடன் இந்த அரிய புண்ணிய காரியத்திற்கு நன்கொடைகளை காசோலையாகவோ வரைவோலையாகவோ /பணமாகவோ/ பொருளாகவோ கொடுக்கலாம்.

**In Favour of "Sri Raghavendra Swamy Mutt"**

என்ற பெயரிலும் அல்லது நீங்கள் இருந்த இடத்திலிருந்தே நேரடியாக
**SB A/c.No.0914101127013, IFSC:CNRB0000914, Canara Bank, Triplicane Branch, Chennai**
என்ற வங்கி கணக்கிற்க்கும் கட்டலாம் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு : 28440528 / 9620391337

# பேனா குரல்
## PENA KURAL
தமிழ் மாத இதழ்

R.Dis. No.: 939/2022

மலர்-01 இதழ்-01 நவம்பர்-2022 விலை: ₹20/-

வெளியீட்டாளர்: NV சிவசங்கர்

ஆசிரியர்: ராதிகா S

நிர்வாக ஆசிரியர்: P. கார்த்திகேயன்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர்
K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின்

தலைமை நிருபர்கள்:
B.மணிகண்டன், S.தமிழினி,
தங்கராஜ், G.தீபக், M.திலிப் குமார்,
N.விஜயலட்சுமி, V.சந்தோஷ் குமார்

நிருபர்கள்:
B.சரவணன், S.தமிழ் மணி, U.சரவணன்,
R.ஹரிகிருஷ்ணன், K.கலைமணி, D.பாமா,
P.அசோக்குமார், ஜெபசீலன், K.சுபுலட்சுமி,
S.தமிழ் வீரன், A.ஐயப்பன், S.அன்பு மணி

புகைப்பட நிருபர் : V. கவியரசன்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *RS Sun Printz*

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:
**பேனா குரல்**
7/13, பொன்மனசெம்மல் தெரு,
எம்.ஜி.ஆர் நகர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600078.

தொடர்புக்கு:
044 43051155, 8754582123
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.



★ பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
★ பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.




# டெங்கு கட்டுக்குள் உள்ளதா?

தமிழ்நாடு உள்பட நாட்டின் 9 மாநிலங்களில் டெங்கு காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளது. இதனை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக மருத்துவ வல்லுனர்கள் அடங்கிய குழுக்களை மத்திய அரசு, பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பியுள்ளது. பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், தமிழ்நாடு, கேரளா, உத்தரப்பிரதேசம், டெல்லி, ஜார்க்கண்ட், ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆகிய 9 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் டெங்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடியது என்பதால் டெங்கு பரவல் குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தலைமையில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

டெங்கு பாதிப்பு மற்றும் பாதிக்கப்படாத மாநிலங்களுக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு அனுப்பியுள்ளது. கடந்த ஆண்டு அக்டோபரில் பதிவான டெங்கு பாதிப்புகளைக் காட்டிலும், நடப்பாண்டில் அதிகமானோருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மத்திய அரசின் மருத்துவக்குழுவினர் டெங்கு பாதிக்கப்பட்ட 9 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் மாநில சுகாதாரத்துறையுடன் இணைந்து, டெங்கு கட்டுப்பாடு பணிகளை மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. டெங்கு பாதிப்புகளை முன்னரே கண்டறிந்து சிகிச்சை அளிப்பது, நோய் பரவும் இடங்களை அறிந்து கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பணிகளில் சுகாதாராத்துறை அமைச்சகம் கவனம் செலுத்தி வருகிறது.

பொதுவாக மழைக்காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவுவது வழக்கமாகவுள்ளது. நன்னீரில் உருவாகும் ஏடிஸ் கொசுக்கள், பகலில் மனிதர்களை கடித்து டெங்குவை பரப்புகின்றன. டெங்கு பாதிக்கப்பட்ட ஒருவரை கடிக்கும் கொசுக்களால் அவரிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவும் அபாயமும் உள்ளது. சாதாரண காய்ச்சல் போல் இல்லாமல், தலைவலி, உடல்வலி, கண்ணுக்கு பின்புறம், எலும்பு மற்றும் வயிற்றுப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் வலியை ஏற்படுத்தும். இதை உணர்வோர் உடனடியாக மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெறுவதன் மூலமே பெரும் பாதிப்புகளை தவிர்க்க முடியும். நாள்கணக்கில் மழைநீர் வடியாமல் தேங்கிக் கிடப்பதால் இதில் கொசுக்கள் உற்பத்தி ஆகின்றன. இதனால் மக்களுக்கு டெங்கு, மலேரியா உள்ளிட்ட உயிரை கொல்லும் நோய்கள் பரவ காரணமாகிறது. வீடுகளில் கொசுப்புழு வளரிடங்கள் கண்டறியப்பட்டு கொசு ஒழிப்பு மருந்து தெளித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்கள் பருவமழை காலம் என்பதால் மழைநீர் தேங்கக்கூடிய இடங்களில் கொசுப்புழுக்கள் வளர வாய்ப்புள்ள இடங்களில் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் உபயோகமற்ற டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உடைந்த சிமெண்ட் தொட்டிகள் முதலியவற்றை உடனடியாக அகற்றி டெங்கு உள்ளிட்ட நோய்கள் பரவுவதைத் தடுத்திட வேண்டும். நீர் அதிகம் காணப்படும் இடங்களான கிணறு, மேல்நிலைத் தொட்டி, கீழ்நிலைத் தொட்டி, தண்ணீர் தொட்டிகள் முதலியவற்றை கொசுக்கள் மற்றும் கொசுப்புழு புகாதவகையில் மூடி வைக்க வேண்டும். தண்ணீர் நிரப்பிய பூ ஜாடி மற்றும் கீழ்த்தட்டு, குளிர்பதனப் பெட்டியின் கீழ்த்தட்டு, மணிபிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றி தங்களின் வீடு, மொட்டை மாடிகளில் உள்ள மழைநீர் தேங்கும் பொருட்கள் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரித்தால் டெங்கு மட்டுமல்ல எந்த நோயும் நம்மை நெருங்காது.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

## பெண்களை மையப்படுத்திய சாவல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையை அடல் புத்தாக்கத் திட்டம் தொடங்கியது



பெண்களை மையப்படுத்திய சாவல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையை அடல் புத்தாக்கத் திட்டத்தை நிதி ஆயோக் தொடங்கி வைத்தது. அடல் புதிய இந்தியாவின் சவால்கள் என்ற நடவடிக்கையின் 2ம் கட்ட நிகழ்வாக அடல் புத்தாக்கத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பிரச்சனை என்ன என்பது குறித்து கண்டு உணர்வது, தேர்ந்தெடுப்பது, ஆதரவளிப்பது, தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்க நடவடிக்கைகள் மூலம் தீர்வை ஏற்படுத்துவது என்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

சமூகத்தை உருவாக்கும் சிற்பியாக பெண்கள் திகழ்கின்றனர் என்பதை கருத்தில் கொண்டு, அடல் புதிய இந்தியாவின் சவால்கள் என்ற நடவடிக்கை மூலம் சமூக அமைப்பில் பல்வேறு நிலையில் உள்ள பெண்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும். குறிப்பாக, பெண்கள் சுகாதாரம், பாதுகாப்பு, ஊரக பகுதியில் உள்ள பெண்களின் வாழ்க்கையை எளிதாக்குதல், தொழில்சார்ந்த கூட்டு நடவடிக்கைகள் போன்றவற்றில் புதுமைகளை புகுத்தி, தீர்வு காண்பதே இதன் நோக்கமாகும். இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு பரமேஸ்வரன் ஐயர் பேசும்போது, பெண்கள் மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இன்றைய நிகழ்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இதற்கு காரணம், பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியதாகும். இந்த நடவடிக்கைளுக்கு பின்புலமாக இருந்து செயல்பட்ட அடல் புத்தாக்கத் திட்டத்துடன் தொடர்புடைய அனைவரையும் நான் பாராட்டுகிறேன். அவர்களின் புத்தாக்க நடவடிக்கைகள் நிச்சயமாக நல்ல தீர்வைக் கொடுக்கும் என்றார்.

அடல் புத்தாக்கத் திட்டத்தின் தலைவர் டாக்டர் சிந்தன் வைஷ்ணவ் பேசும் போது, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் விளைவாக, பெண்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்ற உறுதிப்பாடு ஏற்பட்டது. அதற்கு, பெண்களின் சாவல்களை எதிர்கொள்வதற்கான நிதி ஆயோக்கின் நடவடிக்கை நல்ல பலனை தரும் என்று நம்புவதாக அவர் கூறினார்.

– S.**தமிழ்மணி**

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம்

### பிரதமர் திரு நரேந்திர மோடியின் குறிக்கோளின்படி ஊழல் இல்லாத இந்தியாவை கட்டமைக்க முடியும்

### மக்களைத் தலைவர் திரு ஓம் பிர்லா



குடிமக்களுக்கு அதிகாரம் அளித்தல், வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருதல், ஊழலைத் தவிர்த்தல், ஜனநாயகத்தை மக்களிடையே உண்மையாக கொண்டு செல்லுதல் ஆகியவை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கம் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

புதுதில்லி விக்கியான் பவனில், மத்திய தகவல் ஆணையத்தின் 15-வது ஆண்டுக் கூட்டத்தில், குடிமக்கள் - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மையமாகக் கொண்ட நிர்வாகம் என்ற தலைப்பில் உரையாற்றிய திரு ஓம் பிர்லா, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடியின் குறிக்கோளின்படி ஊழல் இல்லா இந்தியாவை கட்டமைக்க முடியும் என்று கூறினார்.

மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் பேசிய போது, வெளிப்படைத்தன்மை மற்றும் குடிமக்களை மையமாக கொள்ளுதல், மோடி நிர்வாக மாதிரியின் முத்திரை என்று தெரிவித்தார்.

அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குடிமக்கள் ஜனநாயகத்தின் முக்கிய தூண் என்றும், மத்திய தகவல் ஆணையம் தகவல் மூலம், மக்களுக்கு அதிகாரம் அளிக்க தொடர்ந்து பணியாற்றும் என்று குறிப்பிட்டார்.

கடந்த 2020-21-ஆம் ஆண்டில் 38,116 என்ற எண்ணிக்கையில் நிலுவையில் இருந்து வழக்குகளை 2021-22-ஆம் ஆண்டு 23,405 என்ற அளவிற்கு மத்திய தகவல் ஆணையம் வெற்றிகரமாக குறைத்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தலைமை தகவல் ஆணையர் திரு ஒய் கே சின்ஹா, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் அரசின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை அதிகரித்துள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை தகவல் ஆணையர்கள் மற்றும் மத்திய தகவல் ஆணையத்தின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

– V. **கவியரசன்**

# 41 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஆணை முதலவர் ஸ்டாலின்




ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு மாதம்தோறும் ரூ.10,000 ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் 31.11.2022 அன்று தொடங்கி வைத்துள்ளார்.

செய்திகளை பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்லும் வகையில் 24 மணி நேரமும் அயராது பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர், எத்தகு இயலாமைக்கும் ஆளாகாமல் இருக்க இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர்களின் பணியினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதன்முறையாக உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்தார். மேலும், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதோடு, நல வாரிய உதவித்தொகைகள், நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன்படி பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப நிதி உதவியை 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியது. அனைத்துத் தரப்புச் செய்திகளையும் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்லும் வகையில் 24 மணி நேரமும் அயராது பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர், எத்தகு இயலாமைக்கும் ஆளாகாமல் இருக்க, அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2022-23ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில், பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு 3 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் செய்தி முகமைகள் ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற 41 பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.10,000/- ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் ஸ்டாலின் 7 ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்.

– S.தமிழ் வீரன்



# மழை நீரை குடிக்கலாமா அப்படி குடித்தால் என்ன ஆகும்?

மழைகாலத்தில் மழை நீரை சேகரித்து குடிப்பதும், சமைப்பதும் பல வீடுகளில் வாடிக்கையாக உள்ளது. மழை நீரில் சாதாரண குழாய் நீரை விட சத்துகள் அடங்கியிருப்பதாக பொதுவான நம்பிக்கையும் மக்களிடம் நிலவுகிறது.

மழைநீரில் அமிலத்தன்மை அதிகமாக இருப்பதால், அதனை முறையாக சேகரிப்பதிலும், பயன்படுத்துவதிலும் சரியான அக்கறை காட்டவில்லை என்றால், அதனால் நோய் பரவும் அபாயமும் இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

மழைநீரில் பிரத்தியேகமான தனிமங்கள், தாதுபொருட்கள் எதுவுமில்லை என்றும் மழைநீர் பெய்யும் இடங்களை பொறுத்துதான் அதன் தரம் இருக்கும் என்பதால், எல்லா இடங்களில் கிடைக்கும் மழைநீரிலும் ஒரே மாதிரியான தாதுக்கள் இருக்கும் என்று சொல்லமுடியாது என்கிறார் இந்திய தொழில்நுட்ப கழக பேராசிரியர் இந்துமதி.



நீரை சேகரிப்பது மற்றும் பயன்படுத்துவது பற்றி விளக்கிய அவர், "மழை நீரை எங்கிருந்து சேமிக்கிறோம் என்பதை பொறுத்துதான் மழை நீரின் தரம் அமையும். வனப்பகுதியில் பெய்யும் மழை நீரும், காற்று மாசுபாடு அதிகமுள்ள பகுதியில் பெய்யும் நீரும் ஒரே தரத்தில் இருக்காது.

தூய்மையான குடியிருப்பு பகுதியில் பெய்யும் மழை நீரை சேமிக்கலாம். அனல் மின் நிலையம் இருக்கும் பகுதியில், நீங்கள் வசிக்கும் பட்சத்தில் அங்கு மழை நீரை சேமித்தால், மாசுபாட்ட காற்றில் உள்ள





துகள்கள் அந்த நீரில் கலந்திருக்கும். அதனால், தூய்மையான பகுதியில் நீங்கள் வசிக்கிறீர்களா, அங்குள்ள மழைநீரை நீங்கள் சேமிக்கிறீர்களாக என்பதுதான் முதல் கேள்வி,'' என்கிறார்.

''சேமிப்பதற்கு தூய்மையான கலன்களை பயன்படுத்தவேண்டும். அதனை உடனே அருந்துவதை பரிந்துரை செய்வதில்லை. ஏனெனில், மாசுபாடு காரணமாக மழைநீரில் அல்கலைன் என்ற நீர்க்காரத்தன்மை அதிகமாக இருக்கும்.

நீர்காரத்தன்மை எந்தளவில் உள்ளது என்பதை பொறுத்துதான் தண்ணீரின் தரத்தை மதிப்பிடமுடியும். வெள்ளம் ஏற்பட்டு, குடிநீருக்கு எந்த வாய்ப்பும் இல்லை என்ற சமயத்தில், நீரை சேகரித்து, துணியில் வடித்து குடிக்கலாம். பொதுவாக மழைநீரை நன்கு காய்ச்சி குடிப்பதுதான் சிறந்தது,'' என்கிறார் இந்துமதி.

மழை நீரின் தரம் மற்றும் சேமித்துவைத்திருக்கும் கலனை பொறுத்து, ஒருவாரம் முதல் இரண்டு மாதங்கள் வரை குடிப்பதற்கு பயன்படுத்தலாம் என்கிறார் அவர். ''மழைநீரை வடிகட்டுவதற்கு பலவிதமான வடிகட்டிகள் கிடைக்கின்றன.

மணல், கார்பன், ஸ்பாஞ் வகை மற்றும் கிருமிகளை நீக்குவதற்கான வடிகட்டிகள் உள்ளிட்டவை அடிப்படையாக பயன்படுத்தப்படும் வடிகட்டிகள். ஒரு சிலர் மழைநீரை நீண்ட நாட்கள் வீட்டு தேவைகளுக்கு பயன்படுத்த சேமிப்பார்கள். அதனால், முதலில் சேகரித்தவுடன் வடிகட்டிகளில் தூய்மைபடுத்திதான் மழைநீரை பயன்படுத்தவேண்டும்,'' என்கிறார்.

மழைநீரை குடிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டியவற்றை பற்றி தொற்று நோய் நிபுணர் விஜயலட்சுமி; அமிலத்தன்மை மழைநீரில் அதிகம் இருப்பதால், குழந்தைகளுக்கு நேரடியாக மழைநீரை கொடுப்பதை தவிர்க்கவேண்டும் என்கிறார்.



''மழைநீரை முறையாக சேமிக்கவில்லை என்றால், அதில் இருந்து வாடை வரும், அதில் பூஞ்சை வளரும். அந்த நீரை குடிப்பதற்கு, சமைப்பதற்கு பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. வெள்ளம் ஏற்பட்ட காலங்களில், நேரடியாக கலங்கலான மழைநீரை குடித்த மக்கள் பலர் நோய்வாய்ப்பட்டனர்,''என்கிறார் விஜயலட்சுமி.

மேலும், ''தண்ணீரால் பரவும் நோய்கள் ஒவ்வொரு ஆண்டும் பருவமழை காலங்களில் அதிகரிக்கும். மழைநீராக இருந்தாலும் குழாய்நீராக இருந்தாலும், காய்ச்சாமல் நீரை குடித்தால், அதில் நுண்கிருமிகள் இருந்தால், பாக்டீரியா மற்றும் பூஞ்சை தாக்கத்தால் பலவிதமான நோய்கள் ஏற்படும். சாதாரண காய்ச்சலில் தொடங்கி, வயிற்றுபோக்கு, மஞ்சள்காமாலை, மூளைகாய்ச்சல், நிமோனியா காய்ச்சல் வரை ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது,'' என்கிறார்.

– D.பாமா

பணத்திற்கு காலாவதி தேதி இருக்க முடியுமா?
திருநெல்வேலியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் கூறிய அருமையான யோசனை.
*********** எல்லா விஷயங்களுக்கும் காலாவதி தேதி உள்ளது. பணத்திற்கு ஏன் காலாவதி தேதி இல்லை. நோட்டில் காலாவதி தேதி குறிப்பிடப்பட்டால், மக்கள் தானாகவே வங்கிக்குச் சென்று பணத்தை புதியதாக மாற்றுவார்கள். எல்லா பணத்திற்கும் 5 வருட கால அவகாசம் கொடுங்கள். இதை பின்பற்றினால் தானாகவே அனைத்து பணமும் கணக்கில் வந்துவிடும். கருப்புப் பணம் இருக்காது. புத்திசாலித்தனமான யோசனை? தயவுசெய்து இந்த செய்தியை அனைவருக்கும் அனுப்பவும்

# நெய் விளக்கா? பொய் விளக்கா?



நெய் விளக்கு என்ற பெயரில் பொய் விளக்கு வேண்டாம். நெய் தீபம் எனும் பெயரில் பொய் தீபம். ஆலயங்களில் நடக்கும் நெய் தீப ஊழல். விளக்குகளில் நிரப்பப்படும் “நெய்” போன்ற, தோற்றம் கொண்ட திடமான “பசை”யானது, சைவ மற்றும் அசைவ உணவகங்களில் உபயோகப் படுத்தப்பட்ட, எண்ணெய்களை இலவசமாகவோ, மிகக் குறைந்த விலையிலோ வாங்கி, அதை வடிகட்டி, மீண்டும் மீண்டும் கொதிக்க வைத்து, அதில் மரவள்ளிக் கிழங்கு மாவு, டால்டா, மெழுகு மற்றும் பசை மாவு, மஞ்சள் நிறத்திற்காக வண்ணப் பொடியினை கலந்து விளக்குகளில் அடைத்து, ”நெய் விளக்கு” என்று, பொய் சொல்லி, பொய்யான “பசை விளக்கினை” பொது மக்களின் பணத்தினை குறிவைத்து விற்பனை செய்து, கோடிக்கணக்கில் கொள்ளை அடிக்கின்றார்கள்.

முதலில், இந்த கடைகளில் உள்ள நெய்விளக்குகளை ஒரு நாளாவது முகர்ந்து பார்த்து இருக்கின்றீர்களா? ஒரு நெய் விளக்கு ₹3 ல் ஏற்ற முடியுமா? இன்றைய நாளில், ஒரு கிலோ “தூய பசு நெய்யின்” விலை 1 கிலோ ₹650 வரை. ஒரு கிலோ பசு நெய்யில், அதிகபட்சமாக 75 விளக்குகளை ஏற்றுவதாக வைத்துக் கொண்டாலும், விளக்கு மற்றும் திரி உட்பட குறைந்தது ₹6.50 செலவாகும். ஆனால் ₹10க்கு 3 நெய் விளக்கு எப்படி, ஆலயங்களில் இவர்களால் விற்கப்படுகிறது?

உண்மையான பசு நெய்கொண்டு, ஏற்றப்படும் விளக்கின் ஒளி, ஒரே சீராக வெள்ளை ஒளியாக, நறுமணத்தோடு இருக்கும். அந்த ஒளி வெள்ளத்தில், அந்த இடத்தில் உள்ள காற்று தூய்மையாகி, பிராண வாயு சுத்தமாகக் கிடைக்கும்!

ஆனால், இந்த மாதிரி, தரமற்ற “பசை விளக்குகள்” சரிவர எரிவதும் இல்லை, அதோடு ஒருவித நாற்றமும் அடிக்கிறது, வருடம் முழுவதும் கொளுத்தும் 100 டிகிரி வெய்யிலில், நமது உடம்பே உருகி விடும்போல் இருக்கின்ற நிலையில், இந்த “பசை விளக்குகள்” அக்னி வெய்யிலில் கூட உருகாமல், கல்லு மாதிரி இருப்பதை கவனியுங்கள்.

முன்பு எல்லாம் மக்கள் தங்களின் வீடுகளில், பசுவினை வளர்த்து, அதன் பாலில் இருந்து, தயிர், வெண்ணை, நெய் முதலானவற்றை ஆலயங்களில் உள்ள இறைவனுக்கு உபயோகப்படுத்தினார்கள்.

பின்னர் கால ஓட்டத்தில், கடைகளில் இருந்து “வெண்ணை” வாங்கி காய்ச்சி, உருக்கி, அதில் இருந்து நெய்யை உபயோகப்படுத்தினார்கள். அல்லது ஏழை அப்பாவி பால்காரர்களிடம் கறவை பால் வாங்கி காய்ச்சி நெய் எடுத்தோ அல்லது அவர்களிடமே சுத்தமான தரமான நெய்யோ வாங்கி உபயோகபடுத்தினர்.

இல்லை எனில் கடைகளில் மணல் மணலாய் என “பசு நெய்” வாங்கி விளக்கு ஏற்றினார்கள். நாள்பட பசு நெய் என்பது மறைந்து, பல வண்ண டப்பாக்களில், பல வித பெயர்களில் கடைகளில் விற்கப்படுகின்ற “நெய்யினை”க் கொண்டு விளக்கேற்றினார்கள்.

ஆனால் தற்பொழுது, நெய் வாங்கி விளக்கு ஏற்றுவதை மறந்து, சோம்பலின் காரணமாகவும், வசதியின் பொருட்டும், தற்பொழுது ஆலயங்களில், “நெய் தீபம்” என்ற பெயரில் விற்கப்படும், “பசை” விளக்குகளை கோயிலின் உள்ளே கடை விரித்து ஏமாற்றுகின்ற போலி வியாபாரிகள் கொள்ளையடிக்க நெய் விளக்கு என்ற பெயரில், விலை கொடுத்து பொய் விளக்கை வாங்கி, கோயிலில் ஏற்றி விட்டு, விளக்கு ஏற்றும்போது கைகளில் பட்டுவிட்ட, நாற்றம் பிடித்த “பசையினை” கோயில் தூண்களில் தடவி கோயிலையும் நாறடித்து விட்டு போவது அல்ல பக்தி, என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



நாம் கோயிலுக்கு செல்வதே பாவங்களை தொலைக்கத் தான். அப்படி இருக்க இந்தமாதிரி போலியான பொய் விளக்குகளை” வாங்கி, மேலும் மேலும் பாவ செயல்களை செய்ய வேண்டாம்.

கையோடு அகல் விளக்கு, திரி கொண்டு செல்லலாம். வீட்டில் காய்ச்சிய சுத்தமான நெய் அல்லது நமது வீட்டிலிருந்தே எண்ணெய் கொண்டு சென்று விளக்கேற்றலாம். கோயில்களிலும் அருகில் உள்ள கடைகளிலும் நெய் விளக்கு என்ற பெயரில் விற்கப்படும் பொய் விளக்கேற்றி உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டு கோவில்களையும் நாசப்படுத்த வேண்டாமே.

நீங்கள் வீட்டிலிருந்து சுத்தமான நெய், எண்ணெய்களை கொண்டு சென்று ஏற்றுவதால் உங்களுக்கும் நன்மை, இதனால் பொது நலமும் கலந்திருக்கிறது. காற்று மாசு ஏற்படாது.

– K. **கலைமணி**

# பிரதமர் மோடிக்கு ‘பொன்னியின் செல்வன்’ நாவலை பரிசளித்தார் முதல்வர் ஸ்டாலின்



காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக மதுரை விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் திண்டுக்கல் வந்தடைந்தார் பிரதமர் மோடி. திண்டுக்கல் வந்த அவரை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய அமைச்சர் எல்.முருகன், கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோர் வரவேற்பு அளித்தனர். அப்போது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு ‘பொன்னியின் செல்வன்’ நாவலின் ஆங்கிலப் பதிப்பை அளித்து வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து ஹெலிபேட் தளத்தில் இருந்து கார் மூலம் பட்டமளிப்பு விழா நடைபெறும் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வழியில் பிரதமர் மோடிக்கு ஏராளமான பாஜகவினர் நீண்ட வரிசையில் நின்று வரவேற்பு அளித்தனர். விழாவுக்கு வருகை தந்த பிரதமர் மோடி, காத்திருந்த பொதுமக்களை பார்த்தவுடன், காரில் இருந்து வெளியே வந்து கூடியிருந்த மக்களைப் பார்த்து உற்சாகமாக கைகளை அசைத்தார்.

– A.ஐயப்பன்




# தமிழ்நாடு புதிய விண்வெளி, பாதுகாப்பு தொழிற்கொள்கையில் சாதிக்குமா?

தமிழ்நாடு அரசு விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறைக்கான கொள்கையை இன்று வெளியிட்டுள்ளது. சென்னையில் நடந்த ஒரு நிகழ்வில் இந்தத் தொழிற்கொள்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார். அடுத்த பத்தாண்டுகளில் இந்தத் தொழில்துறையில் 75 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்ப்பதையும் ஒரு லட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளிப்பதையும் இலக்காகக் கொண்டு இந்தக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தொழில்துறை என்பது தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில்துறை அல்ல. ஏற்கனவே Heavy Vehicles Factory, Engine Factory Avadi (EFA), Combat Vehicles Research & Development Establishment (CVRDE), Ordnance Factory Trichy (OFT), Heavy Alloy Penetrator Project (HAPP), Taneja Aerospace, Titan Engineering and Automation Ltd உள்ளிட்ட பல தொழிற்சாலைகள் பாதுகாப்புத் துறைக்கான பொருட்களை இங்கே உற்பத்தி செய்து வருகின்றன.

இருந்தபோதும், 2019ஆம் ஆண்டு ஜனவரியில் தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்பாதை என்ற திட்டத்தை இந்திய அரசு அறிவித்த பிறகு இந்தத் துறையில் மாநில அரசின் கவனம் திரும்பியது. ஏற்கெனவே தொழிற்சாலை அமைந்துள்ள இடங்கள், உதிரி பாகங்கள் கிடைக்கும் இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், சென்னை, ஒசூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பு தொழிற்பாதைக்கான இடங்களாக தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஐந்து மாவட்டங்களை மையமாகக் கொண்டு, 21 மாவட்டங்களில் பாதுகாப்புத் தொழில்துறைக்கான தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிக்கப்படும்.

விமானங்களுக்கான உதிரி பாகங்களைத் தயாரிப்பது, கவச வாகனங்கள் டேங்க்களைத் தயாரிப்பது, விமான பழுதுபார்ப்பு, பராமரிப்பு, ஏவுகணை, ராக்கெட், வெடி மருந்து தயாரிப்பு, சென்சார்கள், ரடார்கள், தகவல் தொடர்பு உபகரணங்கள் தயாரிப்பு, சிறிய ரக ஆயுதங்கள், ரைஃபிள்கள், கப்பல் கட்டுதல் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க இந்த கொள்கையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பல துறைகளில் ஏற்கனவே உதிரி பாகங்கள் தயாரிப்பு, மூலப் பொருள் தயாரிப்பு போன்றவை தமிழ்நாட்டில் நடந்துவருகிறது. இந்த விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையை ஊக்குவிப்பதற்காக அடுத்த பத்தாண்டுகளில் ஐந்தாயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்ய தமிழ்நாடு அரசு முடிவுசெய்திருக்கிறது.



ட்ரோன்கள் எனப்படும் ஆளில்லா விமான தயாரிப்புக்கு மிகப் பெரிய எதிர்காலம் இருக்கும் எனக் கருதப்படுவதால் பாதுகாப்பு தொழிற் வழித்தடத்தில் ட்ரோன் ஆராய்ச்சி, தயாரிப்பு, சோதனை போன்றவற்றுக்கென அதிநவீன, பிரத்யேக பரிசோதனைத் தளத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்திருக்கிறது.

அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவில் விமான தொழில்துறை மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகிலேயே மூன்றாவது பெரிய விமான தொழில்துறை இந்தியாவில்தான் இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, விமான ஓட்டிகளுக்கான பயிற்சிப் பள்ளிகளை தமிழ்நாட்டில் பெரிய அளவில் உருவாக்க அரசு ஆதரவளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவைதவிர பல்வேறு விதங்களில் முதலீட்டிற்கு உதவி, வரிச் சலுகை, அனுமதிகளைத் தாமதமின்றி அளிப்பது போன்ற உதவிகளையும் செய்வதாக தமிழ்நாடு அரசு கூறியுள்ளது. தமிழ்நாடு அரசு விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை மீது கவனம் செலுத்துவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன என்கிறார் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு.

கர்நாடகாவுக்கு மாற்றாகும் தமிழகம்

"இந்தத் தொழில்துறை தற்போது வெகுவேகமாக வளர்ந்துவரும் துறையாக இருக்கிறது. ஆகவே நிறைய வாய்ப்புகள் இந்தத் துறையில் கொட்டிக்கிடக்கின்றன. குறிப்பாக, சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு இந்தத் துறைகளில் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதால்தான் இதில் கவனம் செலுத்துகிறோம். இத்தனை ஆண்டுகளாக விமான தொழில்துறை என்றால் பெங்களூரில்தான் உதிரிபாகங்கள் உற்பத்திசெய்யப்படும் இனி இங்கேயே அதனைச் செய்வார்கள்" என்கிறார் தங்கம் தென்னரசு. ஆளில்லா விமானங்கள் துறையில் தமிழகத்திற்கு மிகப் பெரிய வாய்ப்புகள் இருக்கிறது என்கிறார் அமைச்சர்.

"விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் ட்ரோன்கள் மிகப் பெரிய அளவில் பயன்பாட்டிற்கு வரப்போகின்றன. விரைவிலேயே, ட்ரோன் பைலட்களுக்கான பயிற்சி மையங்களைத் துவங்கவிருக்கிறோம். ஆகவே இதில் பெரிய அளவு வாய்ப்பு நமக்கு இருக்கிறது" என்கிறார் அவர். விரைவிலேயே கோவையில் பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிக்கும் பூங்கா ஒன்று அமையவுள்ளது.

"கோவையில் ஏற்கனவே பல பெரிய நிறுவனங்கள் பாதுகாப்பு உபகரணங்களுக்கான உதிரிபாகங்களை வழங்கிவருகின்றன. ஆகவே, துல்லியமான பொறியியல் பாகங்களை உற்பத்தி செய்யும் துறை ஏற்கனவே வளர்ந்து வருகிறது. இந்தப் புதிய கொள்கை மேலும் ஊக்கமளிக்கும்" என்கிறார் தங்கம் தென்னரசு. தமிழ்நாட்டில், பாதுகாப்பு உபகரணங்களுக்கான பயிற்சி மற்றும் சோதனை மையங்களை அமைக்க மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. அதேபோல, தமிழ்நாட்டில் விமானங்களைப் பழுதுபார்க்கும் இடங்கள் கிடையாது. அவற்றை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவை அமையும்பட்சத்தில் ளிணிவி எனப்படும் பெரிய விமான தயாரிப்பு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடுகளைச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது தமிழ்நாடு வெளியிட்டிருப்பது இரண்டாவது விண்வெளி மற்றும் பாதுகாப்பு உபகரண தொழிற்துறை கொள்கை. இதற்கு முன்பாக 2019ஆம் ஆண்டிலேயே முதல் கொள்கை குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. "சிறு, குறு தொழில்துறைக்கு முக்கியத்துவம் தருவதில் முந்தைய கொள்கையிலிருந்து தற்போதைய கொள்கை வேறுபட்டு நிற்கிறது" என்கிறார் தங்கம் தென்னரசு.

இந்தியாவில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையில் மிகப் பெரிய வளர்ச்சி இருக்கும் என நம்பும் நிலையில், அந்த வளர்ச்சியின் பெரும் பகுதியை பயன்படுத்திக்கொள்ள தமிழ்நாடு நினைக்கிறது.

வேறு சில மாநிலங்களும் இந்த வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தாலும்,தமிழ்நாட்டின் முக்கியமான பலம் அதன் மனிதவளம் என்கிறார் அவர். "எல்லா மாநிலங்களிலும் இடம், சலுகைகள் ஆகியவற்றைக் கொடுப்பார்கள். ஆனால், இங்கே உள்ள மனித வளத்தில் உள்ள தொழில்நுட்ப அறிவு தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய பலமாக இருக்கும்" என்கிறார் தங்கம் தென்னரசு.

– P.கார்த்திகேயன்

# இந்த நூற்றாண்டின் குழந்தைகளுக்கு (2K KIDS)

## ஒரு பேராசிரியர் சொல்லும் உண்மை!

வாட்ஸ்ஆப் பதிவு

பிடித்த பேச்சாளர் - சீமான்.
பிடித்த இயக்குநர் - அட்லீ.
பிடித்த சாப்பாடு - புரோட்டா & நூடுல்ஸ்.
பிடித்த இசையமைப்பாளர் - அனிருத்.
பிடித்த விளையாட்டு - ஃப்ரீ ஃபையர்.
பிடித்த வரலாற்றுப் புத்தகம் - வாட்ஸ்அப்.
பிடித்த சொல் - மொக்கை.
பிடித்த ஒரே பொருள் - செல்ஃபோன்.
படிக்காமல் பாஸ் ஆக வேண்டும்.
கஷ்டப்படாமல் வேலை கிடைக்க வேண்டும்.
யாருக்குமே மரியாதை தரக்கூடாது.

தனக்கு தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்ற மனநிலை.

எல்லாமே உடனே கிடைக்க வேண்டும். காசுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

விழுமியங்களே தேவையில்லை, சாதி, மதம்தான் எல்லாம்.

சினிமா, கிரிக்கெட், செல்ஃபோன் இவைதான் உலகம்.

பெண்கள் மீது மரியாதையே இல்லை.

ஆசிரியர்கள், மூத்தோர்கள் எல்லாம் புழு பூச்சி மாதிரி.

சினிமா பாடல் வரிகளைக் கூட சொந்த ரசனையோடு சொல்லத் தெரியாது.

வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம், அரசியல் குறித்த அடிப்படை புரிதல்கள் கூட இல்லை.

ஒரு பேங்க் செலான் கூட நிரப்பத் தெரியாது.

ஒரு வரி கூட வாசிப்பதில்லை.

தப்பில்லாமல் தமிழோ, ஆங்கிலமோ எழுதவும், பேசவும் வராது.

ஒரு விஷயத்தை கோர்வையாகச் சொல்ல வராது.

பிரபலங்கள் வீதியில் நின்று விஷம் குடித்துக் கொண்டிருந்தாலும் அதையும் சுயமி எடுத்து முகநூலில் போட வேண்டும்.

பள்ளிச் சீருடையுடன்கூட டாஸ்மாக் போகிற அளவுக்கு தைரியம்.

சின்ன வயசிலேயே வாயைத் திறந்தாலே கெட்ட வார்த்தை. எப்போதும் ஏதாவது ஒரு போதையில் தன்னை மூழ்கடித்துக் கொள்ள விரும்புகிற மனநிலை.

எதிலும் நிரந்தரமாக நிலை கொள்ளாத அலைபாயும் மனம்.

ஜட்டி தெரிய பேண்ட் போட்டு, காண்டாமிருகம் மாதிரி முடிவெட்டி, எவரையும் கண்களைப் பார்த்து பேச முடியாமல் விநோதமாக வெறித்த பார்வையுடன் நடப்பது.



மறுக்க முடியாத வேதனை தரும் உண்மை. பயமாக இருக்கிறது. இன்றைய தலைமுறையின் போக்கு.

இந்த அபாயத்தை சமூகம் இன்னும் முழுமையாக உணரவில்லை.

பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓரளவுதான் தெரியும்.

பெற்றோர்கள் சுத்தம்; அவர்களின் அளவுக்கு மீறிய செல்லம்தான் சகலத்துக்கும் காரணம்.

தங்களை அறியாமல் அவர்கள் இவர்களின் அனைத்து அடாவடிகளுக்கும் துணை போகிறார்கள்.

அவர்கள் பார்க்கிற பிள்ளைகளில்லை இவர்கள்.

இவர்கள் உள்ளுக்குள் வேறொரு ஜாம்பியாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பள்ளியில் படிக்கிற போது அவன் தன்னை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.

கடந்த ஐந்தாண்டுகளில் கல்லூரி மாணவர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள்.

நான் 80, 90's kids-களுக்கும் வகுப்பெடுத்திருக்கிறேன்.

இவர்களுக்கும் அந்த இரு தலை முறை-யினருக்கும் மலையளவு வித்தியாசம்.

மேற்சொன்னவை ஏதோ ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் என்று என்ன வேண்டாம். இது இரு பாலருக்கும் பொருந்தும்.




இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். நான் தேங்கி விட்ட பேராசிரியனோ, தலைமுறை இடைவெளியில் சிக்கித் தவிக்கிற பேராசிரியனோ இல்லை. எல்லா விதத்திலும் என்னை புதுப்பித்துக் கொள்கிறவன். இப்போது 2K Kids-யும்கூட வகுப்பறைகளில் ஈர்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். பலரை இலக்கியத்தின் பக்கம் கூட அழைத்து வந்திருக்கிறேன். நான் சொல்வது 2k kids-ன் பொதுமனநிலை குறித்துதான். விதிவிலக்குகளை அல்ல. பல பெற்றோர்கள் தம் பிள்ளைகள் அந்த விதிவிலக்குகளில் தம் பிள்ளையும் ஒரு ஆள் என்று பொய்யாக நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

காலம்காலமாக மூத்தோர் இளையோர் மீது வைக்கிற குற்றச்சாட்டாக இதை எண்ணி விடாதீர்கள். எனக்கு இரண்டுக்கும் வேறுபாடு தெரியும். சமீபமாக வகுப்பறைகளில் ரசித்த சினிமா பாடல்களின் வரிகளையாவது சொல்லுங்க என்று கேட்டு அதற்குக் கூட பதில் வராமல் ஏமாந்து கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுகளுக்கு முன்பெல்லாம் இப்படிக் கேட்டால் மாணவர்கள் அசத்தி விடுவார்கள். காரணம் யாராக, எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் யதார்த்தத்தம் இதுதான். காதுகளே இல்லாத தலைமுறையிடம் நாம் பழைய சொற்களோடு தோற்றுக் கொண்டிருக்கிறோம்

கடந்த பல்லாயிரம் வருடங்களில் இப்படி ஒரு ரசனை கெட்ட, சுய சிந்தனையற்ற, சோம்பலும் அலட்சியமும் கொண்ட தலை முறையை உலகம் சந்திக்கவே இல்லை.

மறுக்க முடியாத வேதனை தரும் உண்மை. பயமாக இருக்கிறது. இன்றைய தலைமுறையின் போக்கு.

மேற்கண்ட கருத்துக்களை யாரோ ஒரு பேராசிரியர் இன்றைய பிள்ளைகளின் போக்கின் உண்மை நிலையை விளக்கியிருக்கிறார்.

90'ஸ் கிட்ஸ்களை 'சரிங்க பூமர் அங்கிள்' என 2கே கிட்ஸ்கள் கலாய்த்து வருகின்றனர். அனைத்தும் எங்களுக்குத் தெரியும் மற்றவர்கள் எல்லாம் கற்காலத்தில் வந்தது போலவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். யார் எது சொன்னாலும் "நீங்கள் பூமர் அங்கிளா?, ஓகே பூமர், ஓகே பூமர் அங்கிள்" என்ற வார்த்தைகளை தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

உண்மையில் பூமர் அங்கிள் என்ற சொல் எங்கிருந்து வந்தது. இப்போது பூமர் அங்கிள் என்ற வார்த்தை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. 1983ம் ஆண்டு முதல் 1996 வரை பிறந்த 90ஸ் கிட்ஸ்களை கலாய்க்கும் வகையில், 1997க்கு பிறகு பிறந்த "புள்ளிங்கோ" என்று செல்லமாக அழைக்கப்படும் 2கே கிட்ஸ் இந்த வார்த்தையை பயன்படுத்தத் தொடங்கினர்.



"நாங்களெல்லாம் அந்த காலத்தில எப்படி இருந்தோம் தெரியுமா?" என்று பழமை பேசி திரிபவர்களை தான் பூமர் அங்கிள் என சொல்கிறார்கள். அவர்கள் 50 முதல் 70க்கு வயதுக்குட்பட்ட தாத்தாவாக இருக்கலாம், 30 முதல் 40 வயது உட்பட்ட சித்தப்பாவாக இருக்கலாம், அல்லது 1990ல் பிறந்த அண்ணனாக கூட இருக்கலாம் அவர்கள் அனைவரையும் "ஐயோ ஆரம்பிச்சுட்டார்" என ஓடி ஒளியும் இன்றைய தலைமுறைதான் இந்த வார்த்தையை பயன்படுத்தி வருகின்றனர்.

இன்றைய குழந்தைகள் பள்ளி படிக்கும் வயதிலே மோட்டார் சைக்கில் ஓட்ட அனுமதிப்பதும், எந்நேரமும் செல்போனில் மூழ்கிக்கொண்டிருப்பதை கண்டுகொள்ளாமல் இருப்பதும், இந்த நிலை ஏற்பட பெற்றோர்கள்தான் காரணம் என்று ஏற்றுக்கொள்ளதான் வேண்டும். இவர்கள் நம்மகிட்ட வளர்கிறார்களா இல்லை, நாம் இவர்களிடம் செல்லப்பிராணிகள் மாதிரி வளர்க்கப்படுகிறோமா என்று தெரியாத ஒரு காலம்.

– S. **தமிழினி**

# இளையராஜாக்கு கவுரவ டாக்டர்



## பிரதமர் மோடி வழங்கினார்

இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு கடந்த ஜூலை மாதம் மாநிலங்களவை நியமன எம்பி பதவி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போது இளையராஜாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் சார்பில் அறிவிக்கப்பட்ட கவுரவ டாக்டர் பட்டத்தை பிரதமர் மோடி இளையராஜாவுக்கு வழங்கினார்.

**ராஜாவுக்கு டாக்டர் பட்டம்:**

காந்திகிராமத்தில் உள்ள காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் 36வது பட்டமளிப்பு விழாவும் காந்தி கிராம நிறுவனத்தின் பவள விழாவும் 11.11.2022 அன்று நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்துகொண்டு மாணவ, மாணவிகள் உள்ளிட்ட மொத்தம் 2,314 பேருக்கு பட்டங்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜாவுக்கும் கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்தார் பிரதமர் மோடி. அப்போது இளையராஜாவும் பிரதமர் மோடியும் காந்தி குல்லாவை அணிந்திருந்தனர். இதனையடுத்து திரை பிரபலங்களும் ரசிகர்களும் இளையராஜாவுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

**பிரதமர் மோடி வருகை:**

முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி பெங்களூருவில் இருந்து தனி விமானம் மூலம் மதியம் 2 மணிக்கு மதுரை சென்றடைந்தார். பின்னர் மதுரையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் திண்டுக்கல் மாவட்டம் அம்பாத்துரைக்கு சென்றார். அங்கு பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து பிரதமர் மோடி கார் மூலம் காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகத்துக்கு சென்றடைந்தார். அதனைத் தொடர்ந்தே பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

**ராஜாவுக்கு இரண்டாவது அங்கீகாரம்:**

இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு ஜூலை மாதம் மாநிலங்களவை நியமன எம்பி பதவி வழங்கப்பட்டது. அதன் பின்னர் பிரதமர் மோடியை இசையமைப்பாளர் இளையராஜா சந்திக்கவில்லை. இந்நிலையில், திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதல் முறையாக பிரதமர் மோடியை சந்தித்தார் இளையராஜா. ஒரே ஆண்டில் இரண்டு சிறப்பான அங்கீகாரங்கள் இளையராஜாவுக்கு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த விழாவில் மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமனுக்கும் கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்படது.

**தமிழ்த் திரையிசையின் பெருமை:**

தமிழ்த் திரையுலகில் இசையமைப்பாளர் இளையராஜா செய்திட்ட சாதனைகள் ஏராளம் எனலாம். 46 ஆண்டுகளில் ஆயிரம் படங்களுக்கும் மேல் இசையமைத்துள்ள இளையராஜா, ஏராளமான இசை ஆராய்ச்சிகளையும் செய்துள்ளார். இந்திய அளவிலும் சர்வதேச அரங்கிலும் பல விருதுகளும் கவுரவங்களும் கிடைத்துள்ள இளையராஜாவுக்கு வழங்கப்பட்ட கவுரவ டாக்டர் பட்டம் மேலும் ஒரு அங்கீகாரமாக அமைந்துள்ளது. இளையராஜாவிற்கு கிடைத்துள்ள இந்த கவுவரவ டாக்டர் பட்டம் தமிழ்த் திரையுலகுக்கும் பெருமை சேர்த்துள்ளதாக சினிமா ஆர்வலர்கள் கூறி வருகின்றனர்.

– B.மணிகண்டன்

# ஆன்மிகமா? ஆன்மீகமா?



ஆன்மிகம் வேறு; ஆன்மீகம் வேறு. ஆன்மிகம் என்ற சொல், ஆன்ம + இகம் என்றும், ஆன்ம + இயம் என்று பிரிக்கப்பட்டு ஆன்மக் கொள்கைகளின் பிழிவுச்சாரம் எனப் பொருள் கோடல் சரியே! ஆனால், இவை இரண்டும் வேறு என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆன்மீகம் என்ற சொல்லானது, ஆன்மாவின் மீட்சி; ஆன்மா மீண்டெழும் நிலை; ஆன்மாவின் மீட்டெடுப்பு; ஆன்மா மீக்குயர்தல் (மிக்கூர்தல் அதிகமாகுதல், மேம்படல்); ஆன்மா மேலெழுதல் என்றவாறு பொருள் தரும். எவ்வாறெனில், உலகில் ஒவ்வொரு ஆன்மாவும், தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப, பல்வேறு பிறவிகளாக இறைவனால் மண்ணில் தோற்றுவிக்கப் பெறுகின்றன. இதில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை அடங்கும். இதன் நோக்கம் இந்த ஆன்மாக்கள், பிறவி எடுத்தலில் இருந்து மீண்டு, மீண்டும் பிறவாத நிலை பெறுவதற்கே ஆகும்.

இவ்வாறு ஆன்மாக்கள் பிறவாத நிலைமையைப் பெறவேண்டுமானால், அவ்வான்மாக்கள் இவ்வுலக வாழ்வில் பொய்மையையும் நிலையாமையையும் அறிந்து உணர வேண்டும். ஆன்மாக்களுக்குக் கிடைத்துள்ள இவ்வுலக வாழ்வு நிலையற்றது. அது இந்த நிமிடமே அழிவதும், நாளை நின்று வாழ்வதும் இறைவன் கையிலேயே இருக்கிறது. இவை அனைத்தும் தெரிந்திருந்தும், தெரியாத நிலையிலேயே ஆன்மாக்கள் இவ்வுலக வாழ்வில் பலவிதமான இச்சையுற்று ஆசைக்கடலில் சிக்கித் தவிக்கின்றன.

"ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப் பாசத்தினால் அல்லல் பட இருந்தேனை"

என்பது அபிராமிபட்டரின் அருட்புலம்பல். இவ்வாறு ஆன்மாக்கள் அறியாமையில் அழுந்தி மறைப்புண்டு இருப்பதையே உலக மாயை என்றும், மாயையில் சிக்கி ஆன்மாக்கள் அல்லல் உறுகின்றன என்றும் ஞானிகள் சொல்லிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு உலக மாயையால் மறைக்கப்பட்டிருக்கும் ஆன்மாவானது இறைவனால் அவற்றிற்குத் தரப்பட்ட பகுத்தறிவைக்கொண்டு சிந்தித்து, உண்மை உணர்ந்து, பேரறிவாளனாகிய இறைவனையும் அவன் செயலையும் உணர்ந்து, தன்முனைப்பற்று, இவ்வண்டம் முழுவதையும் இயக்குவது இறைவன் திருவருளே என்பதை முற்றிலும் உணர்ந்து நன்மை தீமையை சமமாகப் பாவித்து, இன்பதுன்பமற்று இருக்கும் நிலையை ஆன்மா பெறவேண்டும். அதற்காகவே ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறவிகளைப் பெறுகின்றன. இதுவே சைவ சித்தாந்தம் கூறும் உண்மையுமாகும்.

எனவே, உலக மாயையில் இருந்து விடுபட்டு, மெய்யுணர்வு பெறுதலையே "ஆன்மீகம்' எனும் சொல் குறிக்கிறது. அதாவது, ஆன்மாவானது மீட்சியடையும் நிலையையே ஆன்மாவின் மீட்சியையே ஆன்மீகம் என்ற சொல் குறிக்கிறது. எனவே, ஆன்மிகம் வேறு; ஆன்மீகம் வேறு! என்று தெளிக!

– R.ஹரிகிருஷ்ணன்

# இங்கிலாந்தின் புதிய பிரதமராக

## இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் பதவி ஏற்றார்!

கடந்த செப்டம்பர் மாதம் 6-ம் தேதி பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்ற லிஸ் ட்ரஸ், அங்கு நிலவிய பொருளாதார பிரச்னைகள் காரணமாக கடந்த வியாழக்கிழமை (20-10-22) தனது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து, பிரதமர் பதவிக்காக நடந்த தேர்தலில் பென்னி மோர்டவுன்ட் பின்வாங்கியதை அடுத்து ரிஷி சுனக் பிரதமராகப் பதவி ஏற்க இருக்கிறார்.

கடந்த ஏழு மாதங்களில் பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்க உள்ள மூன்றாவது பிரதமர் ரிஷி சுனக் ஆவார். போரிஸ் ஜான்சனுக்குப் பிறகு பதவிக்கு வந்த லிஸ் ட்ரஸ் 45 நாட்கள் பதவியிலிருந்த பிறகு அக்டோபர் 20 அன்று பதவி விலகினார். அவருக்குப் பின் தற்போது ரிஷி சுனக் பிரதமராகப் பதவி ஏற்கிறார்.

ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். பிரிட்டன் வரலாற்றில், இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒருவர் பிரதமர் பதவி வகிக்க இருப்பது இதுவே முதல் முறையாகும். கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினரான இவர் கடந்த 2015 முதல் ரிச்மண்ட் (யார்க்ஸ்) நாடாளுமன்ற உறுப்பினராக (எம்பி) இருந்து வருகிறார். ரிஷி சுனக், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றபோது பகவத்கீதையின் மீது உறுதிமொழி எடுத்திருக்கிறார்.

இவரின் பெற்றோர் இந்திய வம்சாவளியைச் சார்ந்தவர்கள். 1960 'களில் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்துள்ளனர். சுனக்கின் தந்தை யாஷ்வீர் சுனக், தேசிய சுகாதார சேவை மையத்தின் பொது





மருத்துவராக சேவை புரிந்தவர். அவரின் தாயார் உஷா சுனக் ரசாயன கடை ஒன்றை நடத்தி வந்தவர். ரிஷி சுனக்கின் மனைவி, இன்ஃபோசிஸின் தலைவர் நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷதா மூர்த்தி ஆவார்.

ரிஷி சுனக்கின் ஆண்டு வருமானம் 700 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல். இந்த வருமானத்தை அவர் இங்கிலாந்தில் உள்ள சொத்துக்களில் முதலீடு செய்திருப்பதாக சொல்லப்படுகிறது. ரிஷி சுனக் சிறந்த எழுத்தாளரும் கூட. 'எ போட்ரேட் ஆஃப் மார்டர்ன் பிரிட்டன்' மற்றும் பொருளாதாரம் வணிகம் சார்ந்த பல புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார்.

கோவிட் -19 நோய்தொற்று காலக்கட்டத்தில் ரிஷி சுனக் அரசியலிலும் கன்சர்வேடிவ் கட்சியிலும் மிகவும் பிரபலமானவராக இருந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் 2020 இல் Ipsos MORI நடத்திய வாக்கெடுப்பில், 1978 இல் லேபர் டெனிஸ் ஹீலிக்குப் பிறகு, சுனக் தான் அதிக திருப்தியான மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். எனவே அவர் அடுத்த பிரதம மந்திரி வேட்பாளராகும் வாய்ப்பும் அப்போதே இருந்தது. நகைச்சுவைகள் மற்றும் கிசுகிசுக்கள் மூலம் சுனக் சமூக ஊடகங்களிலும் பத்திரிகைகளிலும் மிகவும் பிரபலமானார்.

சுனக் மீதான பொதுமக்களின் எண்ணங்கள் 2021 இல் நேர்மறையாகவே இருந்தன. எனினும் காலப்போக்கில் அவரது புகழ் படிப்படியாகக் குறைந்தது. 2022 -ம் ஆண்டின் தொடக்கத்தில் சுனக் குடும்பத்தின் நிதி விவகாரங்கள் ஆய்வுக்கு உட்பட்டதால் இந்த வீழ்ச்சி தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ரிஷி சுனக் பெரும்பான்மையானவர்களின் ஆதரவுடன் இங்கிலாந்தின் அடுத்த பிரதமராகப் பதவி ஏற்றார்.

– V. **சந்தோஷ் குமார்**

# புத்தியை தீட்டு!

ஒரு காட்டிற்கு இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள், மாலை மீண்டும் இருவரும் கூடும் போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார்,

மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சர்யம். நம்மை போல தானே அவனும், அவனால் மட்டும் இப்படி இது சாத்தியமானது என்று. ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான்!

நண்பன் அவனிடம் கேட்டான், இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று! அவன் சொன்னான், இடை விடாமல் வெட்டி கொண்டே இருந்தேன் என்று,..

சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன், ஆம் அதிக விறகுகள் பெற வேண்டுமே ஆனால் நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான்!

நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்து கொள்வேன் என்று சொன்னான் நண்பன்! மறுநாள் அவனும் அதே போல் ஓய்வு எடுத்து எடுத்து மரம் வெட்டினான், இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை,

மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான், மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான், நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான், ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியை தீட்டி கொண்டிருந்தான்!



– S.அன்புமணி



| Advertisement Tariff | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |

**PENA KURAL**, Tamil Monthly

Administrative Office:

**3/885, Pillaiyar Kovil Street, (Opp Bajanai Kovil), Mettukuppam, OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**

**Ph: 044-43051155, 8754582123**

**Email: penakural@yahoo.com**

வரலாறு முழுவதும் மனிதர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்ட கேள்விகளில் ஒன்று என்ன என்பதுதான் நிறம் என்பது பிரபஞ்சம். பாடப்புத்தகங்கள் மற்றும் பலவற்றில் உள்ள படங்களைப் பார்க்கும்போது, பிரபஞ்சத்தின் நிறம் கருப்பு என்று நினைப்பது இயல்பானது. ஆனால், உண்மை நிலை வேறு. இந்தக் கட்டுரையில் பிரபஞ்சம் என்ன நிறம், அதன் பண்புகள் மற்றும் அதற்கு ஏன் அந்த நிறம் உள்ளது என்பதைச் சொல்லப் போகிறோம்.

**முக்கிய பண்புகள்**

பிரபஞ்சம் மொத்தமாக வரையறுக்கப்படுகிறது பொருள், வேகம், ஆற்றல் மற்றும் நேரம் மற்றும் இடம் ஆகியவற்றின் பல்வேறு வடிவங்கள். பெருவெடிப்புக் கோட்பாட்டின் படி, பிரபஞ்சம் மூன்று இடப் பரிமாணங்களிலும் (உயரம், நீளம் மற்றும் ஆழம்) மற்றும் நான்காவது பரிமாணத்திலும் (அதாவது, நேரம்) தொடர்ந்து விரிவடைவதைப் புரிந்து கொள்ளலாம். பிரபஞ்சம் நிலையான இயற்பியல் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. இவற்றில் பலவற்றை பூமியில் சரிபார்க்க முடியும், மற்றவை இன்னும் விசாரணையில் உள்ளன அல்லது தற்போது தெரியவில்லை. பிரபஞ்சத்தில் உள்ள தூரங்கள் மிகவும் பெரியவை, அவை ஒளி ஆண்டுகளில் அளவிடப்பட வேண்டும். ஒரு ஒளி ஆண்டு தூரத்திற்கு சமம் ஒளி ஒரு வருடத்தில் அல்லது 9.500 மில்லியன் கிலோமீட்டர்களில் பயணிக்கிறது.

இதுவரை அறியப்பட்ட பிரபஞ்சம் முழு பிரபஞ்சத்தின் ஒரு பகுதி மட்டுமே, ஏனெனில் அது எல்லையற்றதாக இருக்கலாம். ஆனால் காணக்கூடிய அல்லது காணக்கூடிய பிரபஞ்சம் வரையறுக்கப்பட்டுள்ளது, அது அனைத்து ஆற்றலையும் மற்றும் அதன் உருவாக்கம் முதல் முழு பிரபஞ்சத்தையும் பாதித்த அனைத்து பொருட்களையும் கொண்டுள்ளது.

கவனிக்கக்கூடிய பிரபஞ்சம் நிறுவப்பட்ட பண்புகளை கொண்டுள்ளது, அவை:

அவதானிப்புகளின் அடிப்படையில், காணக்கூடிய பிரபஞ்சம் தோற்றம் அல்லது வடிவத்தில் தட்டையானது.

பிரபஞ்சத்தின் அளவு 46.500 பில்லியன் ஒளி ஆண்டுகள் மற்றும் பூமியிலிருந்து அனைத்து திசைகளிலும் நீண்டுள்ளது. கிரகங்கள் பிரபஞ்சத்தின் மையங்கள் அல்ல, ஆனால் கவனிக்கக்கூடிய பிரபஞ்சத்தை வரையறுக்கும் கண்ணோட்டங்களாக செயல்படுகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். விண்மீன் திரள்கள் என்பது வான உடல்கள், நட்சத்திரங்கள் மற்றும் பிரபஞ்சப் பொருட்கள் ஆகும், அவை முழு பிரபஞ்சத்தின் ஒரு அலகுக்கு ஒத்த ஈர்ப்பு விசைக்கு பதிலளிக்கும் வகையில் விண்வெளியின் ஒரு பகுதியில் குவிந்துள்ளன. இவை சுழல் விண்மீன் திரள்கள், நீள்வட்ட விண்மீன் திரள்கள், ஒழுங்கற்ற விண்மீன் திரள்கள் மற்றும் லெண்டிகுலர் விண்மீன் திரள்கள் என அவற்றின் வடிவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். பிரபஞ்சம் 4% அணுக்கள், 23% குளிர் இருண்ட பொருள் மற்றும் 73% இருண்ட ஆற்றல் ஆகியவற்றால் ஆனது.

**அணு:** சாதாரண பொருளின் மிக அடிப்படையான மற்றும் முக்கியமான துகள் என வரையறுக்கப்படுகிறது. உயிரற்ற பொருட்கள், பூமி, உயிரினங்கள் மற்றும் மனிதர்கள் கூட அணுக்களால் ஆனது.

**இருண்ட விஷயம்:** மின்காந்தக் கதிர்வீச்சை உருவாக்காத ஒரு வகைப் பொருள்.

**இருண்ட ஆற்றல்:** இது பிரபஞ்சத்தை முடுக்கி விகிதத்தில் விரிவடையச் செய்யும் அழுத்தத்தை உருவாக்குகிறது. இருண்ட ஆற்றல் இருப்பதற்கான சோதனை ஆதாரம் இல்லை என்றாலும், அது பிரபஞ்சத்தில் விரிவடையும் இயக்கத்தை அண்டவியல் தொடர்பான நிலையான மாதிரியில் விளக்க முடியும்.

# பிரபஞ்சத்தின் நிறம் என்ன?



**பிரபஞ்சத்தின் நிறம்**

பிரபஞ்சம் என்பது தெரியாதவைகள் நிறைந்த ஒரு இடம், மனிதன் பதிலளிக்க முயற்சி செய்கிறான். இன்றைய சூரியன் வரை, அதன் அபரிமிதத்தைப் பற்றி அதிகம் அறியப்படவில்லை, இது அதன் உள்ளே நிகழும் நிகழ்வுகள் மற்றும் அதை உருவாக்கும் பொருட்கள் குறித்து அதிக கேள்விகளை எழுப்புகிறது. இப்போது, ஒரு எளிய ஆனால் மிகவும் பழைய கேள்விக்கு இறுதியாக பதிலளிக்க முடியும். பிரபஞ்சத்தின் நிறம் என்ன? அறிவியல் புனைகதை திரைப்படங்கள் மற்றும் இரவு வானத்தைப் பற்றிய நமது சொந்த அவதானிப்புகள், அது கருப்பு அல்லது குறைந்த பட்சம் சில இருண்ட நிழல்கள் என்று நம்புவதற்கு நம்மை வழிநடத்தும். இப்போது உண்மை முற்றிலும் மாறுபட்டதாகத் தெரிகிறது.

பிரபஞ்சத்தின் நிறம், இதைத்தான் நாம் முதலில் கண்டுபிடிக்க வேண்டும். பிரபஞ்சத்தின் நிறம் கருப்பு அல்ல. ஜான் மூர்ஸ் யுனிவர்சிட்டி இன்ஸ்டிடியூட் ஆப் ஆஸ்ட்ரோபிசிக்ஸ் (லிவர்பூல், யுகே) பேராசிரியரான இவான் பால்ட்ரி, வேர்ட்ஸ்சைடுகிக்.காமிற்கு கருப்பு என்பது ஒரு நிறம் கூட இல்லை என்று விளக்கினார். உண்மை என்னவென்றால், கருப்பு என்பது "கண்டறியக்கூடிய ஒளி இல்லை." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒளி இருக்கும் வரை, வண்ணம் உள்ளது: ஒளியின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப அது மாறுகிறது. பிரபஞ்சத்தில், தனிப்பட்ட நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் திரள்கள் தொடர்ந்து வெவ்வேறு ஒளி அலைகளை வெளியிடுகின்றன, எனவே நிறம் இல்லாதது ஒரு பிரச்சனையாக இருக்காது.

எனவே, பிரபஞ்சம் முழுவதும் ஒளியால் நிரம்பியிருப்பதால், ஸ்வின்பர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் (ஆஸ்திரேலியா) வானியற்பியல் மற்றும் சூப்பர் கம்ப்யூட்டிங் மையத்தின் பேராசிரியரான கார்ல் கிளாஸ்ப்ரூக், பால்ட்ரி மற்றும் சக ஊழியர்களுடன் சேர்ந்து, பிரபஞ்சத்தின் சராசரி நிறத்தை தீர்மானிக்க முயன்றார்.

**பிரபஞ்சத்தின் நிறத்தை நாம் எவ்வாறு கண்டறிவது?**

வெறுமனே, அவை வெளியிடும் மின்காந்த கதிர்வீச்சின் அலைகளை அளவிடுவதன் மூலம். போன்ற பிரிவுகளை உள்ளடக்கியதாக இன்று நாம் அறிவோம் காமா கதிர்கள், எக்ஸ்-கதிர்கள், புற ஊதா, புலப்படும் ஒளி, அகச்சிவப்பு கதிர்வீச்சு, நுண்ணலைகள் மற்றும் ரேடியோ அலைகள். மனிதக் கண்ணுக்கு, மற்ற கருவிகளைப் பயன்படுத்தாமல், கண்ணுக்குத் தெரியும் ஒளி மட்டுமே உணரக்கூடியது, ஏனெனில் அதன் அலைநீளங்கள் மட்டுமே நாம் இயற்கையாகப் பிடிக்க முடியும். மின்காந்த கதிர்வீச்சின் இந்த சிறிய அலையில் தான் நாம் "நிறம்" என்று அழைக்கிறோம்.

எனவே பிரபஞ்சத்தின் நிறம் என்ன என்பதைத் தீர்மானிக்க, நாம் முதலில் செய்ய வேண்டியது நட்சத்திரங்கள் மற்றும் விண்மீன் திரள்களால் உமிழப்படும் புலப்படும் ஒளியின் அலைநீளங்களை அளவிடுவதுதான். பின்னர், இவை அனைத்தையும் இணைத்து உருவாக்குவதன் மூலம், நீங்கள் பிரபஞ்சத்தின் "சராசரி" நிறத்தைக் காணலாம்.

இந்த அலைநீளங்களின் கூட்டுத்தொகையை பால்ட்ரி மற்றும் கிளேஸ்புரூக் "காஸ்மிக் ஸ்பெக்ட்ரம்" என்று அழைக்கின்றனர். அவர்களின் 2002 கணக்கெடுப்பின் மூலம், 2பீதி கேலக்டிக் ரெட்ஷிஃப்ட் சர்வே என்று அழைக்கப்படும், ஆராய்ச்சியாளர்கள் குழு தரவுகளை சேகரித்தது. காணக்கூடிய பிரபஞ்சத்தில் உள்ள 200,000க்கும் மேற்பட்ட விண்மீன் திரள்களில் காணக்கூடிய அலைநீளம்.

பிரபஞ்சத்தின் நிறத்தைக் கண்டறிய இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய முயற்சி இதுவாகும். ஏற்கனவே உள்ள அலைநீள வரம்புகளைக் காட்டும் ஒரு "வரைபடம்" கிடைத்தவுடன், அவை CIE வண்ண இடத்தின்படி சராசரியாகக் கணக்கிடப்படும். 1931 இல் வெளிச்சம் பற்றிய சர்வதேச ஆணையத்தால் உருவாக்கப்பட்டது, அவை அடிப்படையில் நிலையான நிலைமைகளின் கீழ் மனிதனின் பார்வைத் திறனை அளவிடுகின்றன.

**பிரபஞ்சத்தின் உண்மையான நிறம் என்ன?**

உங்கள் தரவு பெறப்பட்டு, உங்கள் கணினி நிரல் CIE வண்ண இடத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவுடன், அல்காரிதத்தின் தரவு முடிவுகள் ஓரளவு கணிக்கக்கூடியதாக இருக்கும். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, அண்ட நிறமாலையின் இறுதி நிறம் வெளிர் பழுப்பு, வெள்ளை நிறத்தை அணுகும் முயற்சி. பலர் இந்த நிறத்தை காஸ்மிக் லேட் என்று அழைக்கிறார்கள்.

– B. **சரவணன்**



# சித்த மருத்துவ குறிப்புகள்

1) பொன்மேனி தரும் குப்பைமேனி: குப்பை மேனி இலையையும் உப்பையும் சேர்த்து அரைத்து சொறி, சிரங்குகளுக்குத் தேய்த்துவர குணமாகும்.

2) தேளை விரட்டும் குடியோட்டிப்பூண்டு: பிரம்மதண்டின் பச்சை வேரைச் சிதைத்து தேள்கடி வாயில் வைத்துக் கட்ட நஞ்சு நீங்கும்.

3) வயிற்றுவலி போக்கும் நறுவலி: நறுவிலிப்பட்டையை இடித்துச் சாறு பிழிந்து, தேங்காய்ப் பாலில் கலக்கி குடிக்க கடினமான வயிற்றுவலி போகும்.

4) காற்று சுத்திகரிப்பான் - சர்க்கரை: சர்க்கரையை நாட்பட்ட நோயாளிகளின் படுக்கை அறையில் புகைக்க சுத்தக்காற்று உண்டாகி அறை சுத்தப்படும்.

5) தலைபாரம் நீக்கும் கிராம்பு: கிராம்பை நீர்விட்டு மை போல அரைத்து நெற்றியிலும் மூக்கு தண்டின் மீதும் பற்றிட தலைபாரம் நீரேற்றம் குணமாகும்.

6) காயத்துக்கு காட்டாமணக்கு: காயம்பட்டு, இரத்தம் வெளிப்பட்ட இடத்தில் காட்டாணக்கு பாலைப் பூச குருதி நிற்கும். காயமும் ஆறும்.

7) உப்பலுக்கு உப்பிலாங்கொடி: மாந்தத்தினால் குழந்தைகளின் வயிறு உப்பிக் காணின், உப்பிலாங்கொடியை அரையில் கட்டத் தீரும்.

8) குழந்தையை காப்பான் கரிப்பான்: கரிசாலைச் சாறு 2 துளியுடன், 8 துளி தேன் கலந்து கொடுக்க கைக்குழந்தைகளுக்கு உண்டாகும் நீர்க்கோவை நீங்கும்.

9) கடலையும் அடிதடியும்: கடலை இலையை வேகவைத்து அடிபட்ட வீக்கம், மூட்டுப் பிசகல் முதலியவைகளுக்குச் சூட்டோடு வைத்துக் கட்ட தீரும்.

10) மயக்கத்துக்கு ஏலம்: ஏலக்காய் 1 பங்கு, பனைவெல்லம் லு பங்கு சேர்த்து, எட்டுப்பங்கு நீர்விட்டுக் காய்ச்சி கொடுக்க பித்த மயக்கம் நீங்கும்.

11) புளியிருக்க புண்ணேது?: புளியிலை, வேப்பிலை இவ்விரண்டையும் சமஅளவு எடுத்து இடித்து எட்டுபங்கு நீர்விட்டுக் காய்ச்சி புண்களைக் கழுவி வர, ஆறாத புண்கள் ஆறும்.

12) பால்கட்டுக்கு பாசிப்பயிறு: பாசிப்பயிறு மாவை வெந்நீர் விட்டுக் களியாகக் கிளறி மார்பில் பற்றிட பால்கட்டு குறைந்து வீக்கமும் குறைந்து போகும். மார்பின் நெறிக்கட்டிகளும் குறையும்.

13) மயிர்கறுக்க மருதோன்றி: மருதோன்றி இலை, நிலவாரை இரண்டையும் சேர்த்து அரைத்துப் பூச மயிர் கறுக்கும்.

14) வாந்தி நீக்கும் நெல்லி: நெல்லியீர்க்கு, கருவேம்பீர்க்கு, வேப்பீர்க்கு மூன்றையும் சேர்த்து இடித்து, நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க வாந்தி உடனே நிற்கும்.

15) படர்தாமரைக்கு: அறுகம்புல்லும், மஞ்சளும் சேர்த்து அரைத்து படர்தாமரையில் பூச தீரும்.

16) பல் ஈறு, வீக்கம், வலிக்கு: கிராம்பு, கற்பூரம், ஓமம் எடுத்து நன்றாகத் தட்டி வீக்கம் உள்ள ஈறுகளில் வைத்து சிறிது நேரம் சென்றபின் வாய் கொப்பளிக்க பல் ஈறு, வீக்கம் தீரும்.

17) மலச்சிக்கலுக்கு: பிஞ்சு கடுக்காய் - 100 கிராம், சுக்கு - 100 கிராம், எடுத்து தட்டி 1 குவளை நீரில் போட்டு காய்ச்சி இரவு படுக்க போகும்பொழுது குடித்து விட்டு படுக்கவும். நன்றாக மலம் இளகும்.

18) மூலம் அகல: ஆகாசத் தாமரை இலையை அரைத்து தொடர்ந்து தடவி வந்தால் மூலம் அகன்று விடும்.

19) முகப்பொலிவிற்கு: உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும்.

20) சூட்டினால் உண்டாகும் இருமலுக்கு: மிளகை தூள் செய்து சம அளவு பனைவெல்லம் கலந்து சுண்டைக்காய் அளவு ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டும்.

21) கல்லடைப்புக்கு - தாம்பூலம்: எருக்கம் பூவின் மொக்கு ஏழு எடுத்து சுண்ணாம்பு போடாமல் வெற்றிலை பாக்குடன் வைத்து உண்ணவும். இப்படி 2 அல்லது 3 வேளையில் கல் விழும்.

22) தாய்ப்பால் சுரக்க கீரை: கோவை இலையை நெய்யில் வதக்கி, வெள்ளைப் பூண்டு சேர்த்து வதக்கி, கால் வயிறு கீரை, காலையில் உண்டு விட்டு ஆகாரம் சாப்பிடவும். இவ்வாறு 3 நாள் செய்ய பால் சுரக்கும்.

23) அரையாப்பு தீர: எலுமிச்சம் வேர், சத்திசாரணைவேர் அரைத்து கெச்சக்காய் அளவு நல்லெண்ணையில் கலந்து சாப்பிடவும் 3 நாளில் தீரும்.

24) குழந்தைகள் பேதிக்குப் பிட்டு வகை: புளியாரை, வாழைப்பூ சமனெடை எடுத்து இடித்து பிட்டவியல் செய்து தேன் சேர்த்து பிசைந்து கொடுக்க பேதி நிற்கும்.

25) கர்ப்பிணிகளுக்கு குடிநீர்: கர்ப்பிணிகளுக்கு மலசலம் கட்டினால், ஒரு பலம் பழைய நெல்லிவற்றலை இடித்துக் குடிநீர் செய்து, சமஅளவு பசும்பால் விட்டு சாப்பிட, மலசலம் வெளியேறும்.

26) பசி உண்டாக: புதினா சாறு 1 பங்கு, எலுமிச்சம் பழச்சாறு 3 பங்கு கூட்டி கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

27) இருமலுக்கு தேனூறல்: 5 பலம் தேனை நன்றாய்க் காய்ச்சி சுடுகையில் மிளகுத்தூள் படிகாரம் (12 கிராம்) போட்டுக் குலுக்கி கொடுக்கவும்.

28) வெள்ளை தீர்க்கும் புங்கன்: புங்கன் கொழுந்தை நெகிழ அரைத்து நல்லெண்ணெய் கலந்து கொடுக்க வெள்ளை தீரும்.

29) அரையாப்புக்கு அரிசிக் களிம்பு: முருங்கை வேர்ப்பட்டையும், புழுங்கலரிசியும் உப்பும் சேர்த்து அரைத்து கட்ட கட்டி கரையும்.

30) துத்தி டீ: துத்தியிலை கஷாயம் வைத்து பால், சர்க்கரை கலந்து கொடுக்க மேகச்சூடு தணியும்.

31) வாய்ப்புண் தீர்க்கும் மருதாணி: மருதாணி இலையைப் பஞ்சுபோல் இடித்து அரைப்படி தண்ணீர் விட்டு காய்ச்சி வடித்து வாய் கொப்புளிக்கத் தீரும்.

32) நீர்த்துவார எரிவு தீர: வால்மிளகு 5 கிராம், நல்ல நீர்விட்டு அரைத்து தண்ணீரில் கலந்து 1 நாளைக்கு 4 முறை கொடுக்கவும்.

33) அஜீரண பேதிக்கு: மிளகை வறுத்துப் பொடி பண்ணி திரிகடி பிரமாணம் தேனில் கொள்ளத் தீரும்.

34) உடல் இளைத்தவருக்கு: பூசினிவித்தின் பருப்பை எடுத்து பொடித்துக் காய்ச்சிய பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை கூடும்.

35) இரத்த கடுப்புக்கு: மாங்கொட்டை பருப்பை அரைத்து பாலில் கலக்கி உண்டு வர இரத்தகடுப்பு, சீதக்கடுப்பு இவை குணமாகும்.

36) வெளுத்த மயிர் கறுக்க: கரிய போளத்தை நெல்லிக்காயின் சாற்றால் அரைத்துப் பூசி வந்தால் மயிர்கள் கறுத்து வளரும்.

37) தொண்டை கம்மல் தீர: கற்பூர வள்ளிச் சாற்றில் கற்கண்டுத் தூள் ஒரு சிட்டிகை போட்டுச் சாப்பிட்டால் தொண்டைக்கம்மல் நிவர்த்தியாகும்.

38) வண்டுகடிக்கு: வெட்பாலை இலை, கொடி, வேர் முதலிய சமூலம் அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு எடுத்து லு படி பசுவின் பாலில் கலந்து சாப்பிடவும். 3 நாள் காலையில் சாப்பிடக் கரப்பான், வண்டுக்கடி இவை நீங்கும்.

39) சூட்டுக்குத் தைலம்: அகத்திக்கீரை சாறும், நல்லெண்ணெயும் சமனாய்க் கூட்டி அடுப்பிலேற்றி வெந்தயத்தைப் பாலிலறைத்துப் போட்டுத் தைலபதமாக காய்ச்சி இறக்கி தலைமுழுகி வந்தால் சகல சூடுந்தணியும் தேகம் குளிர்ச்சியாகும்.

40) கிருமிகள் விழ: வேப்பீர்க்கு 10 வராகன், கடுக்காய் தோல் 4 வராகன், பிரண்டை சாற்றில் மைபோலரைத்து சுண்டைகாயளவெடுத்து விளக்கெண்ணெயில் மத்தித்து கொடுக்க கிருமிகள் வந்துவிடும்.

41) மூலம் தீர்க்கும் ஆவாரை: ஆவாரங் கொழுந்து, ஆவாரம்பட்டை, அறுகன் வேர் இவைகளை சமஅளவு எடுத்து உலர்த்தி சூரணம் செய்து 2 வேளை தேனில் (அ) நெய்யில் உண்டுவர உள்மூலம் தீரும்.

42) மூலத்திற்கு வேது: இளநீரில் வல்லாரை இலையை அவித்து, வரும் ஆவியை மூலத்தில் காட்டிப் பிறகு இலையை வைத்துக் கட்டிகொள்ள உடனே குணமாகும்.

43) ஈளை தீர்க்கும் இம்பூரல்: இம்பூரல் செடியும் வல்லாரைச் செடியும் சமஅளவு எடுத்து இடித்து குடிநீராக்கி உட்கொள்ள சுவாசகாசம், ஈளை இருமல் குணமாகும்.

44) கைநடுக்கம் தீர: தூதுவளையை மைபோல அரைத்து சுண்டைக்காய் அளவு காலைமாலை பசும்பாலில் 15 நாள் சாப்பிட தீரும்.

45) இருமல் தீர: இலவங்கப்பட்டை ஒன்றரை பலம், வால்மிளகு கால் பலம் பொடித்து 3 வேளையாக நெய்யில் தர இருமல் தீரும்.

46) காதில் சீழ் வருதல் தீர: இந்துப்பு, சுக்கு சமஎடை கூட்டிப் பொடித்து, வெண்ணெயில் போட்டு காய்ச்சி 4 முதல் 5 முறை விட சீழ் வடிதல் தீரும்.

47) தொண்டை புண்ணிற்கு: நவாச்சாரத்தை கோழிமுட்டை வெண்கருவில் அரைத்து தொண்டைக்குழியில் தடவ தீரும்.

48) தலைவலிக்கு: அதிமதுரம், சோம்பு, சர்க்கரை வகைக்கு 35 கிராம் சூரணம் செய்து 1 கிராம் தேனில் உண்ண ஒற்றை தலைவலி தீராத தலைவலி தீரும்.

49) சீதபேதிக்கு: நாட்டுச் சர்க்கரையும், நெய்யும் கலந்து சாப்பிட தீரும்.

50) யானைக்கால் வீக்கம் வடிய: முருங்கைப் பட்டையுடன் சிறு அளவு கடுகு சேர்த்தரைத்து லேசாக பற்று போட யானைக்கால் வீக்கம் வடியும்.

51) விக்கல் தீர்க்கும் இந்துப்பு: இந்துப்பு சூரணத்தை நெய்யுடன் கலந்து உண்ண விக்கல் நிற்கும்.

52) புண்கள் ஆற: தாழம்பூவின் சுட்ட சாம்பலை புண்களின் மீது தூவி வர ஆறும்.

53) முடி உதிர்வதை தவிர்க்க: நன்கு முற்றிய தேங்காயை சிறிது தயிர்விட்டு அரைத்து தலைக்கு தேய்த்துக் குளித்தால் முடி உதிர்வதைத் தவிர்க்கலாம்.

54) கட்டிகள் உடைய: சிவப்பு கீரைத்தண்டு இலையை அரைத்துக் கட்டிகள் மருவுகளுக்கு தடவி வந்தால் பழுத்து உடையும்.

55) அண்ட வாத கட்டு: பப்பாளி இலையை அறைத்து, இரவில் வீக்கத்தின் மீது கட்டி வர அண்டவாயு, அண்டவீக்கம், தீரும்.

56) கண் பூ குணமாக: சிவப்பு நாயுருவி இலையை கண்ணில் பிழிந்து வர கண் பூ மாறும்.

57) இரத்த மூத்திரத்திற்கு: மாதுளம்பூ, கசகசா, வேம்பு, இவைகளை சூரணித்து 3 தடவை 5 மிளகளவு பாலுடன் கொடுக்க இரத்த மூத்திரம் குணமாகும்.

58) இரத்த மூலம் குணமாக: வாழைப்பூ சாறுடன் சீரகத்தை கலந்து அரைத்து தினசரி காலையில் பருக வேண்டும்.

59) அசீரணம் குணமாக: கொத்தமல்லி பூவை குடிநீர் செய்து காலை, மாலை 2 வேளை அருந்த அசீரணம் மற்றும் பித்த சம்பந்தமான நோய்கள் தீரும்.

60) வேர்க்குரு நீங்க: சந்தனத்தை பன்னீரில் அரைத்து பூசலாம்.

61) தேக ஊறலுக்கு: கொட்டை கரந்தை இலையை நிழலில் உலர்த்தி பொடித்து சூரணம் செய்து வேளைக்கு 5 கிராம் வீதம் தேன் கலந்து உண்ண 5 நாளில் ஊறல் மிக குறையும்.

62) சூட்டிருமலுக்கு: சிறுதுத்தி விதையைப் பால்விட்டு ஊறவைத்து காலையில் எடுத்து அந்த கோழையுடன் சிறிது கற்கண்டுதூள் சேர்த்து 6 வேளை சாப்பிட இருமல் எளிதில் விலகும்.

63) நெருப்பு சுட்ட புண்ணிற்கு: வெந்தயத்தை நீர்விட்டு அரைத்து மேற்பூச்சாக பூச எரிச்சல் தணிந்து ஆறும்.

64) நீர்க்கடுப்பு எரிவு தீர: எலுமிச்சம் பழச்சாறும், நல்லெண்ணெய்யும் கலந்து சாப்பிட நீர்க்கடுப்பு, எரிவு தீரும்.

65) சகல விஷத்திற்கும் நசியம்: குப்பை மேனியிலை வெற்றிலை, நவச்சாரம் இவைகளை சிறுநீர் விட்டுத் தட்டித் துணியிற் கட்டி நாசியில் நசியமிட சகலவிஷமும் கலைந்து விடும்.

66) பெரியோர்களுக்கு மலக்கட்டு நீங்க சூரணம்: கருவேப்பிலை தூளும், வல்லாரையிலை தூளும் சமமாய் எடுத்து தேனில் குழைத்து இரவில் போசனம் செய்த பிறகு சாப்பிட்டு வரவும்.

67) பால் உண்டாக: ஆலம் விழுதும், ஆலம் விதையும் சமன் கொண்டு பாலில் காய்ச்சி உண்டால், பாலில்லாத பெண்களுக்கு பால் உண்டாகும்.

- தொடரும்

– U. சரவணன்




# அதற்கான கரணம்?

தமிழ் ஒரு செம்மொழி என்ற அதிகாரபூர்வ அறிவிப்பை 2004ம் ஆண்டு இந்திய அரசு வெளியிட்டபோது தமிழ் அறிஞர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் ஒரு நூற்றாண்டு காலக் கனவு நிறைவேறியது. இந்தியாவில் சமஸ்கிருதம் செம்மொழியாக கருதப்பட்டு அரசின் பல சலுகைகளை அனுபவித்து வந்தாலும், இந்தியாவில் அதிகாரபூர்வமாக செம்மொழி என அறிவிக்கப்பட்ட முதல் மொழி தமிழ்தான். தமிழை செம்மொழியாக அறிவிக்கும் முடிவை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அமைச்சரவை 2004 செப்டம்பர் 17ம் தேதி எடுத்தது. அந்த முடிவை மத்திய தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி அறிவித்தார். இந்தக் கோரிக்கையை பலகாலம் வலியுறுத்தி வென்ற அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி, பல காலமாக இதற்காக வாதாடிய பரிதிமாற்கலைஞர் போன்ற அறிஞர்களுக்கு இந்த வெற்றியை அர்ப்பணிப்பதாக அறிவித்தார்.



**உலகச் செம்மொழிகளில் ஒன்று**

உலகப் புகழ் பெற்ற மொழியியல் அறிஞரும், லத்தீன், கீரேக்கம், தமிழ், சமஸ்கிருதம், ரஷ்யன் உள்ளிட்ட பல உலக மொழிகளில் ஆழ்ந்த புலமை மிக்கவருமான ஜார்ஜ் எல். ஹார்ட் 2000-ம் ஆண்டு தமிழின் செம்மொழித் தகுதி பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார். பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் (George Luzerne Hart) எனும் பெயர் இன்று பலரும் அறிந்த ஒன்று. இதற்கு, ‘தமிழ், செம்மொழி என அறிவிக்கப்படுவதற்கு உரிய அத்தனை தகுதிகளையும் உடையது’ என இவர் எழுதிய பரிந்துரைக் கடிதமும் ஒரு காரணம். தமிழ் செம்மொழிக் கோரிக்கைக்கான உந்து விசையாக இருந்தது இந்த அறிக்கை. தமிழ் உலகச் செம்மொழிகளின் வரிசையில் இருக்கும் ஒரு மொழி என அந்த அறிக்கையில் வாதிட்டார் ஹார்ட். இன்னொன்றையும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் தமிழுக்கு செம்மொழித் தகுதியை தர மறுப்பதற்கு அரசியல் காரணம் மட்டுமே இருக்க முடியும். தமிழுக்கு இந்த தகுதியை அளித்தால் பிற மொழிகளும் அதே கோரிக்கையை முன்வைக்கலாம் என்பதே அந்தக் காரணம் என்று அவர் தீர்க்க தரிசனத்தோடு குறிப்பிட்டிருந்தார். தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட பல இந்திய மொழிகள் பற்றி ஆழ்ந்த அறிவு மிக்கவரான ஹார்ட், இத்தகைய இந்திய மொழிகள் நிச்சயமாக வளம் மிக்க இலக்கியத்தைக் கொண்டிருப்பவை என்றாலும் அவற்றை செம்மொழி என்று கூற இயலாது என்று சொல்லியிருந்தார்.



George Luzerne Hart

**உலகச் செம்மொழிகள் எவை?**

"உலக அளவில் எவை எவை செம்மொழி என்பதற்கான அதிகாரபூர்வ பட்டியல் ஏதும் இல்லை. ஐ.நா. கல்வி, அறிவியல் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ சில மொழிகளை செம்மொழிகளாக அங்கீகரித்திருப்பதாக அவ்வப்போது தவறாக குறிப்பிடப்படுகிறது. மறைந்த கல்வியாளர் வா.செ.குழந்தைசாமி தி ஹிந்துவில் 2010ல் எழுதிய கட்டுரை ஒன்றில் அப்படி ஒரு பட்டியல் இல்லை என யுனெஸ்கோ தமக்கு எழுதிய கடிதத்தில் உறுதி செய்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். செவ்வியல் இலக்கியங்களைக் கொண்டிருக்கிற மொழிகளே செம்மொழிகளாக அடையாளம் காணப்பட்டன என்று வா.செ.குழந்தைசாமி தம் கட்டுரையில் வாதிட்டார்.

உலகச் செம்மொழிகள் எவை என்பதற்கு அப்படி ஓர் அதிகாரபூர்வ பட்டியல் இல்லை என்பதை மொழியியல் அறிஞர் மறைமலை இலக்குவனார் உறுதிப்படுத்துகிறார். 'இது எழுதப்படாத சட்டம்' போன்றது என்கிறார் பேராசிரியர் மறைமலை.

ஐரோப்பியர்கள்தான் செம்மொழிகள் என சிலவற்றை அடையாளப்படுத்தினார்கள். லத்தீனும், கிரேக்கமுமே அவர்களுக்கு செம்மொழிகள். காரணம் லத்தீன் இல்லாமல் அவர்களால் தங்கள் பழைய சமய இலக்கியங்களைப் படிக்க முடியாது. நவீன அறிவியலில் நிறைய கிரேக்கச் சொற்கள் உண்டு. இதனால், ஐரோப்பியர்கள் முன்பெல்லாம் தங்கள் தாய்மொழி தவிர இந்த இரண்டு செம்மொழிகளைப் படிப்பார்கள்.

பிறகுதான் ஹீப்ருவும், சம்ஸ்கிருதமும், சீனமும் பலராலும் செம்மொழியாகப் பார்க்கப்பட்டன. இது அறிஞர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைப் பொறுத்ததுதான். ஜார்ஜ் எல்.ஹார்ட் போன்ற அறிஞர்கள் தமிழை இந்த வரிசையில் வைத்துப் பார்க்கிறார்கள். அதற்குக் காரணம், தமிழின் தொன்மையும், தனித்துவமான மரபும், இலக்கிய வளமும்தான் என்கிறார் மறைமலை.

**தமிழ் ஏன் உலகச் செம்மொழி? ஜார்ஜ் எல்.ஹார்ட் என்ன சொல்கிறார்?**

11.4.2000 அன்று ஹார்ட் தாம் எழுதிய அந்த அறிக்கையில் தமிழ் ஏன் செம்மொழி என்பதற்கான காரணங்களை இப்படி அடுக்குகிறார்: "முதலாவதாக, தமிழ் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பழமை உடையது. நவீன இந்திய மொழிகளின் இலக்கியங்களைவிட தமிழ் (இலக்கியம்) ஆயிரம் ஆண்டுகள் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது. பழைய தமிழ் கல்வெட்டுகளைக் கொண்டு ஆராயும்போது, தமிழின் பழமையான நூலான தொல்காப்பியத்தின் பகுதிகள் கி.மு. 200-ம் ஆண்டினைச் சேர்ந்தவை என்பது தெரியவரும். தமிழின் மிகச் சிறந்த படைப்புகளான சங்கப் பாடல் தொகுப்புகள், பத்துப்பாட்டு போன்றவை கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இவைதான் இந்தியாவில் எழுதப்பட்ட மிகத் தொன்மையான மதச்சார்பற்ற கவிதைகள். காளிதாசரின் படைப்புகளைவிட இவை 200 ஆண்டுகள் மூத்தவை".

"இரண்டாவதாக, இந்தியாவை பூர்வீகமாக கொண்ட, ஆனால் சம்ஸ்கிருத்ததில் இருந்து தருவிக்கப்படாத ஒரே இலக்கிய மரபு தமிழினுடையதுதான். சம்ஸ்கிருதத்தின் செல்வாக்கு தெற்கில் வலிமையாக மாறும் முன்பே தமிழிலக்கியங்கள் எழுந்துவிட்டன. எனவே சம்ஸ்கிருதம் உள்ளிட்ட பிற இந்திய மொழிகளின் உள்ளடக்கத்தில் இருந்து பண்பில் வேறுபட்ட இலக்கியங்கள் இவை. இந்த தமிழ் இலக்கியங்களுக்கு சொந்தமாக கவிதைக் (செய்யுள்) கோட்பாடுகள், சொந்தமாக இலக்கண மரபு, சொந்தமாக அழகியல், எல்லாவற்றுக்கும் மேலாக மிகவும் தனித்துவமான மிகப்பெரிய இலக்கியத் தொகுப்பு உண்டு. சம்ஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளில் இருப்பவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்ட இந்திய உணர்வியலைக் காட்டுகிறவையாக இவை இருக்கின்றன. தமக்கென சொந்தமாக மிக வளமையான, பரந்த அறிவு மரபை இவை கொண்டிருக்கின்றன".



மறைமலை இலக்குவனார்

"மூன்றாவதாக, சம்ஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், சீனம், பாரசீகம், அரபி மொழிகளின் மாபெரும் இலக்கியங்களின் வரிசையில் வைக்கத்தக்கவை தமிழின் செவ்வியல் இலக்கியங்கள். இந்த இலக்கியங்களின் நுட்பமும், ஆழமும், விதவிதமான செயற்பரப்பும், உலகு தழுவிய தன்மையும், உலகின் மாபெரும் செவ்வியல் மரபுகள், இலக்கியங்களில் ஒன்றாக தமிழை ஆக்குகின்றன. (நவீனத்துக்கு முந்திய இந்திய இலக்கியங்களில் விளிம்பு நிலையை விரிவாக கையாள்கிற ஒரே இலக்கியம் தமிழிலக்கியமே). உலகின் மிகச்சிறந்த அறநெறி இலக்கியங்களில் ஒன்று திருக்குறள் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால், பலதரப்பட்ட, பெரும் தமிழ் செவ்வியல் இலக்கியங்களில் திருக்குறளும் ஒன்று, அவ்வளவுதான். இந்த மாபெரும் இலக்கியத்தால் கண்டெடுக்கப்படாத, ஒளி பாய்ச்சப்படாத மனித இருத்தலின் பக்கம் எதுவுமே இல்லை".

"கடைசியாக, நவீன இந்தியப் பண்பாடு, மரபு குறித்த முதன்மையான, தன்னிச்சையான தரவு மூலங்களில் தமிழும் ஒன்று. சம்ஸ்கிருத கவிதை மரபின் மீது தெற்கத்திய மரபின் செல்வாக்கு குறித்து நான் விரிவாக எழுதியிருக்கிறேன். சங்கப்பாடல்களில் தொடங்கி புனித தமிழ் இந்துவிய இலக்கியங்கள் நவீன இந்துவியத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன என்பதும் முக்கியமானது. அவற்றின் கருத்துகள் பாகவத புராணத்திலும், தெலுங்கு, கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளின் பிற பிரதிகளிலும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

வேதங்களைப் போலவே புனிதமாக கருதப்படும், திருப்பதி போன்ற தென்னிந்திய வைணவக் கோயில்களில் வேதங்களோடு சேர்த்து ஓதப்படும் தமிழ்ப் பாடல்கள் உள்ளன. நவீன இந்தோ ஆரிய மொழிகளுக்கு சம்ஸ்கிருதம் மூலமாக இருப்பதைப் போலவே நவீன தமிழுக்கும், மலையாளத்துக்கும் செவ்வியல் தமிழே மூல மொழி" என்று குறிப்பிடுகிறார் ஹார்ட்

அத்துடன் செவ்வியல் மொழிகளுக்கான இலக்கணம் ஒன்றை வரையறுத்து அதனுடன் தமிழைப் பொருத்திப் பார்க்கிறார் ஹார்ட்.




"செவ்வியல் மொழி என்று அழைக்கப்பட வேண்டுமானால் ஒரு மொழி பல கூறுகளைக் கொண்டிருக்கவேண்டும். அது பழமையானதாக இருக்கவேண்டும். ஒரு தனித்துவமான மரபைக் கொண்டிருக்கவேண்டும். அது தானே எழுந்த மரபாக இருக்கவேண்டும், வேறு மரபில் இருந்து கிளைத்திருக்கக்கூடாது. பெரிய, வளமான பண்டைய இலக்கியத் திரட்சியைக் கொண்டிருக்கவேண்டும். இந்தியாவின் பிற நவீன மொழிகளைப் போல இல்லாமல் தமிழ் இந்த எல்லா கூறுகளையும் கொண்டுள்ளது. தமிழ் மிகப் பழமையானது. (லத்தீன் அளவுக்கு இது பழமையானது. அரபியைவிட பழமையானது. முழுவதும் தன்னிச்சையான மரபாக எழுந்தது. சம்ஸ்கிருதத்தில் இருந்தோ, பிற மொழிகளில் இருந்தோ கிட்டத்தட்ட எந்த செல்வாக்கும் இல்லாமலே இது உருவானது. தமிழின் பண்டைய இலக்கியங்கள் விவரிக்க முடியாத அளவுக்கு பரந்தவை, வளமானவை.

தமிழ் செம்மொழி என்று கூறுவதற்கு நான் இது போன்ற கட்டுரையை எழுத வேண்டியிருப்பதே விந்தையானது" என்று குறிப்பிடும் ஹார்ட் உலகின் தலைசிறந்த செவ்வியல் மொழிகளில் ஒன்று தமிழ் என்பது, இந்த துறையைத் தெரிந்தவர்களுக்கு மிக வெளிப்படையாகத் தெரியும் என்றும் கூறுகிறார்.

பேராசிரியர் மறைமலை கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்தக் கட்டுரையை எழுதியதாக தமது கட்டுரையை தொடங்கியிருப்பார் ஹார்ட்.

**ஹார்ட் ஏன் இந்தக் கட்டுரையை எழுதினார்?**

"பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் திமுக இடம் பெற்றிருந்தபோதே தமிழை செம்மொழியாக அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. ஆனால், வழக்கொழிந்த மொழிகளைத்தான் செம்மொழி என்பார்கள், எனவே தமிழ் செம்மொழி அல்ல என்று கூறி இந்தக் கோரிக்கையை மத்திய அமைச்சர் முரளி மனோஹர் ஜோஷி நிராகரித்தார்" என்று குறிப்பிட்டார் மறைமலை.

அப்போது தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சித் துறையின் செயலாளராக இருந்த அவ்வை நடராசனும், செத்த மொழியைத்தான் செம்மொழி என்பார்கள் என்று குறிப்பிட்டு இந்த கோப்பை மூடினார் என்று தமிழறிஞர்கள் பலர் குறிப்பிடுகிறார்கள். தமிழறிஞர் அவ்வை துரைசாமிப்பிள்ளை மகனான நடராசன் இப்படிச் செய்தது பலருக்கும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது என்று குறிப்புகள் உள்ளன. இதைக் குறிப்பிட்டு "முதல்வர் கருணாநிதியிடம் இந்த பிரச்சனையை கொண்டு சென்றபோது அவர் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ம.ராசேந்திரனை அழைத்து இதற்கொரு வழிகாணும்படி கேட்டுக்கொண்டார். ம.ராசேந்திரன் என்னிடம் விவாதித்தார். வெளிநாட்டு மொழியியல் அறிஞர்கள் யாராவது இதைப் பற்றி எழுதினால் மட்டுமே இந்த வாதத்தை உடைக்க முடியும் என்று நான் வலியுறுத்தினேன்" என்கிறார் மறைமலை.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரான ஹார்ட் விடுப்பில் சென்றிருந்தபோது 1997-98 காலகட்டத்தில் ஓராண்டு தமிழியல் துறையில் சிறப்பு வருகை தரு பேராசிரியராகப் பணி புரிந்தேன். ஹார்ட் உலகின் மிகப்பெரிய பன்மொழி அறிஞர். லத்தீன், கிரேக்கம், சம்ஸ்கிருதம் போன்ற பல செம்மொழிகளில் புலமை மிக்கவர். சம்ஸ்கிருத அறிஞராகத் தொடங்கி பிறகு தமிழறிஞர் ஆனவர். எனவே அவர் இது குறித்துப் பேசினால் நடுநிலையாக இருக்கும் என்று கருதி அவரிடம் தமிழின் செம்மொழித் தகுதி பற்றி கட்டுரை எழுதும்படி கேட்டுக்கொண்டேன்" என்று ஹார்ட் கடிதத்தின் பின்னணியை விளக்கினார் மறைமலை.


RAJUKUMAR METTUR DURAISAMY

**தமிழின் தொன்மை**

தமிழ்நாட்டில், 12ம் வகுப்பு ஆங்கிலப் பாடநூலில் ஹார்ட்டின் கடிதம் ஒரு பாடமாக இடம் பெற்றிருந்தது. ஆனால், அந்தக் கடிதத்தோடு சேர்த்து அப்பாடத்தில் இடம் பெற்றிருந்த ஒரு குறிப்பில் தமிழின் தொன்மை கிமு 300 என்றும், சஸ்கிருதத்தின் தொன்மை கிமு 2000 என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து அந்தப் பாடம் மொத்தமும் நீக்கப்பட்டது. இது பற்றிக் குறிப்பிட்ட மறைமலை, ஹார்ட் தமது கடிதத்தில் தமிழ் மொழியின் தொன்மைக்கு காலம் எதையும் நிர்ணயிக்கவில்லை. அவர் குறிப்பிட்டதெல்லாம் இலக்கியத் தொன்மை பற்றிதான் என்றார். தமிழ் மொழியின் தொன்மை பற்றி அவரிடம் கேட்டபோது, தமிழ் நிச்சயமாக சமஸ்கிருதத்தை விட தொன்மையானது. சமரசத்துக்கு வருவதென்றால்கூட அது நிச்சயம் சம்ஸ்கிருதம் அளவுக்கு தொன்மையானது என்று குறிப்பிட்ட மறைமலை, ரிக்வேதத்தில் தமிழ்ச் சொற்கள் இருப்பதை சுனிதி குமார் சாட்டர்ஜி, டி. பர்ரோ & எம்.பி.எமனோ போன்ற பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்கிறார் அவர்.

**தமிழின் தனித்தன்மை**

உலகின் எந்த தொன்மையான மொழியிலும் இல்லாதபடி தமிழின் பண்டைய செவ்வியல் இலக்கியங்கள் மதம் சாராதவை, கடவுளைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாதவை, வாழ்க்கையைப் பேசுகிறவை என்கிறார் செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் தொல்லியல் துறைத் தலைவராக இருந்த ஆய்வாளர் மே.து.ராசுக்குமார். தொன்மையைப் பொருத்தவரை, கீழடி தமிழின் தொன்மையை பின்னோக்கி கொண்டு செல்கிறது என்று கூறும் ராசுக்குமார், பழனி அருகே உள்ள பொருந்தல் அகழ்வாய்வில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டத்தில், விளைவிக்கப்பட்ட நெல்லும் கண்டெடுக்கப்பட்டதை முக்கியமானதாக கருதுகிறார். இந்த மட்பாண்டத்தின், நெல்லின் காலம் 2,450 ஆண்டுகள் முந்தியது என்று தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது.

நன்செய் சாகுபடியின் காலமே இதுவென்றால், புன்செய் பயிர்கள் தோன்றி வளர்ந்த பிறகே நன்செய் தோன்றியிருக்கும். எனவே, இந்த வேளாண்மையோடு சேர்த்து தமிழின் காலத்தை பின்னோக்கி நகர்த்தினால் தமிழின் காலம் மேலும் ஒரு ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லும் என்கிறார் ராசுக்குமார். அதாவது, குறைந்தது 3,500 ஆண்டுகள் என்பது இவர் கருத்து. தமிழில் உலகை அறிய முயலும் தத்துவங்கள் இல்லை. அடிமைப்படுத்தல் இருந்த இடங்களில்தான் இந்த சமூக ஏற்பாட்டை விதியாக கட்டமைக்க தத்துவங்கள் தேவைப்பட்டன. ஆனால், தமிழ்ச் சமூகத்தில் இப்படிப்பட்ட அடிமைப்படுத்தல் இல்லாததால் தத்துவங்களும் தேவைப்படாமல் போயிருக்கலாம் என்கிறார் ராசுக்குமார்.

தமிழகத்தில் அடிமை முறை இருந்ததைப் பற்றிய குறிப்புகளை பலர் எடுத்துக்காட்டியுள்ளார்களே என்று கேட்டபோது, ஒருவருக்கு ஒருவர் தனிப்பட்ட முறையில் அடிமைகளாக ஏதோ ஒரு காரணத்தால் இருந்திருக்கலாம். ஆனால், மேற்கத்திய நாடுகளில் இருந்ததைப் போல அடிமை உற்பத்தி முறை இங்கே இருந்ததில்லை என்கிறார் அவர்.

அறிவைப் பெறுதல் பற்றியும், அறநெறிகளைப் பற்றியும் திருக்குறள் விரிவாகப் பேசுகிறதே இதெல்லாம் தத்துவத்தின் கூறு இல்லையா என்று கேட்டபோது, "வேட்டையாடி, காய் கனி திரட்டி வாழ்ந்த சமூகம், வேளாண் சமூகமாக நிலைபெறும்போது பழைய நெறிகளுக்கும், புதிய நெறிகளுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியிருக்கும். அந்தப் புதிய நெறிகளை கோட்பாடு ஆக்கியதே திருக்குறள் போன்ற அற நூல்களின் பணியாக இருந்தது" என்கிறார் ராசுக்குமார். இந்த இலக்கியங்களின் நோக்கம் இவ்வுலக வாழ்வை மேம்படுத்துவதே நோக்கமாக மட்டுமே இருந்தது என்பது தமிழின் தனித்துவமான மரபு என்கிறார் ராசுக்குமார்.

வள்ளுவர் குறிப்பிடுகிற வரைவின் மகளிர் என்ற தொடரை பலரும் பரத்தையர் என்று புரிந்துகொள்வது தவறானது. வேட்டையாடி, காய்கனி திரட்டி வாழ்ந்த சமூகத்தில் திருமணம் என்ற நிறுவனமயப்பட்ட ஏற்பாடு இல்லை. வேளாண்மை உருவான நிலையில் திருமணம் என்ற நிறுவன ஏற்பாடு உருவாகிறது. இந்நிலையில், புதிதாக உருவான திருமணம் என்ற நிறுவப்பட்ட வரைமுறைக்குள் வராமல், கூடி வாழும் பழைய முறையிலேயே இருந்த பெண்களைத்தான் வள்ளுவர் அப்படிக் குறிப்பிடுகிறார். அவர்கள் பரத்தையர் இல்லை என்று கூறும் ராசுக்குமார், சிலப்பதிகாரம் வரையில் தமிழில் நால்வருண முறையும் இல்லை என்கிறார்.

**– நா வீ சிவசங்கர்**



# கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வாருங்கள்:

## பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

திண்டுக்கல், காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக 36வது பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "குஜராத்தில் பிறந்து, ஒற்றுமையையும் சமூக நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி இந்திய தேசத்தின் தந்தையாக வலம் வந்த அண்ணல் காந்தியடிகளுக்கும் தமிழ்நாட்டுக்குமான தொடர்பு மிக மிக அதிகம். தனது வாழ்நாளில் 26 முறை தமிழ்நாட்டிற்கு வருகை தந்த காந்தியடிகள், தமிழை விரும்பிக் கற்றவர். மோ.க.காந்தி என்று தமிழில் கையெழுத்து இட்டவர். திருக்குறளைப் படிப்பதற்காகவே தமிழ் கற்க வேண்டும் என்று சொன்னவர்.

இவை அனைத்துக்கும் மேலாக உயராடை அணிந்து அரசியல் வாழ்க்கைக்குள் நுழைந்த அவரை அரையாடை கட்ட வைத்தது இந்தத் தமிழ் மண். வட இந்தியாவினர் அனைவரும் ஒரு தென்னிந்திய மொழியைக் கற்க வேண்டும், அது தமிழாக இருக்க வேண்டும் என்று சொன்னவர் காந்தியடிகள். அத்தகைய காந்தியடிகள் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தில் இந்தப் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையில் வருக வருக வருக என வரவேற்கிறேன். கல்வியின் வழியாக மனிதரைச் சமூகத்துக்குப் பயனுள்ளவராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது.

"இந்தியா கிராமங்களில் வாழ்கிறது. கிராமங்கள் உயர நாடு உயரும்" என்ற காந்தியக் கொள்கையின் அடிப்படையில், தேசத் தந்தை காந்தியடிகளின் நல்லாசியோடு அவர்களுடைய சீடர்களான டாக்டர் ஜி.ராமச்சந்திரன், அவரது துணைவியார் டாக்டர் எஸ்.சௌந்தரம் ஆகியோரால் தொடங்கப்பட்ட கிராமிய பயிற்சி நிறுவனம் இன்று நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக வளர்ந்து, சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மாணவர்களும், வெளிநாடுகளைச் சார்ந்த மாணவர்களும், இங்கு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளைப் பயின்று வருகின்றனர் என்பதை அறியும்போது பெருமகிழ்ச்சியடைகிறேன். இதற்கு ஏதுவாக, கல்வி கொடையாக 207 ஏக்கர் நிலத்தினை இப்பல்கலைக்கழத்திற்காக வழங்கிய சின்னாளப்பட்டியைச் சேர்ந்த புரவலர்களை இந்நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.




தமிழ்நாட்டில் இன்று மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் 22 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இவை கலை, அறிவியல், பொறியியல், கல்வியியல், விளையாட்டு, கால்நடை, மருத்துவம், மீன்வளம், தமிழ்வளர்ச்சி, சட்டம், வேளாண்மை மற்றும் இசை ஆகிய துறைகளின்கீழ் திறம்பட செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு, இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாகத் திகழ்கிறது. இதனை மேலும் வலிமைப்படுத்தும் வகையில் மாநில அரசு பல்வேறு கல்வித் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

பெண்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்க "புதுமைப் பெண்" என்கிற மூவலூர் இராமாமிர்தம்மாள் பெயரில் உயர்கல்வி உறுதித் திட்டம், அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வியில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு, ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பயில நிதியுதவித் திட்டம் போன்றவற்றின் மூலமாக அனைவரும் உயர்கல்வி பயில தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது. நான் முதல்வன், இல்லம் தேடிக் கல்வி கல்லூரிக் கனவு உள்ளிட்ட பல்வேறு கல்வித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம். இவை தமிழக எல்லையைத் தாண்டி அனைத்து மாநில அரசுகளும் உன்னிப்பாக கவனிக்கும் திட்டங்களாக அமைந்துள்ளன.

கல்விச் செல்வத்தை வழங்குவது ஒரு மாநில அரசின் கடமை. மாநில அரசின் இத்தகைய முயற்சிகளை ஆதரிக்கவும், ஊக்குவிக்கவும் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலின் கீழ் கொண்டு வரவேண்டும். அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தபோது கல்வி மாநிலப் பட்டியலில்தான் இருந்தது. அவசர நிலை காலத்தின்போது பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டது. பிரதமர், கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூகத்திற்கு சேவை செய்வதே கல்வியின் ஒட்டுமொத்த இலக்கு என்ற காந்தியடிகளின் கூற்றிற்கு ஏற்ப முற்போக்குச் சிந்தனையுடன் அறிவியல் சார்ந்த சமூகமாக தமிழ்ச் சமூகத்தைக் கட்டமைக்க இளைஞர்களாகிய உங்களை வேண்டுகிறேன்.

உண்மை, ஒழுக்கம், வாக்கு தவறாமை, அனைவருக்கும் சமமான நீதி, மதநல்லிணக்கம், வகுப்பு ஒற்றுமை, சிறுபான்மையினர் நலன், தனிநபருக்கான மதிப்பு, ஏழைகள் நலன், அகிம்சை, தீண்டாமை விலக்கு, அதிகாரக் குவியலை எதிர்த்தல், ஏகபோகத்துக்கு எதிர்ப்பு, சுதந்திரமான சிந்தனை, அனைவர் கருத்துக்கும் மதிப்பளித்தல், கிராம முன்னேற்றம் ஆகியைவகள்தான் காந்தியத்தின் அடிப்படைகள்!

இவை அனைத்தும்தான் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் விழுமியங்கள்! இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமாக காந்தியின் பெயரைச் சொல்ல நம்மை நாம் தகுதிப்படுத்திக் கொள்வோம்.

இந்த பெருமைமிகு விழாவில் இசைஞானி இளையராஜாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும். இசை உலகத்தின் மாமேதையான இளையராஜா, மிருதங்க வித்துவான் உமையாள்புரம் சிவராமன், பட்டம் பெற்றுள்ள மாணவ, மாணவியர் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

காந்திய நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவர் களாக, பரப்புரை செய்பவர்களாக, நடந்து காட்டுபவர்களாக இளைய சமுதாயம், மாணவர்கள் இயங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனை நீங்கள் சாதித்துக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

– **ஆசிரியர்**

# சனாதன தர்மம் என்றால் என்ன?



சனாதன தர்மம் என்பது வாழ்வின் மாறாத பரிமாணமாக, நமது இருப்பின் அல்லது உயிரின் அடித்தளமாக இருக்கிறது. அது புழுவாக இருந்தாலும், பூச்சியாக இருந்தாலும், பறவையாக இருந்தாலும், விலங்காக இருந்தாலும், தாவரமாக இருந்தாலும், அவை அனைத்தும், அதனதன் இருப்பை நிர்வகிக்கும் அடிப்படை விதிமுறைகளான சனாதன தர்மத்தால் ஆளப்படுகின்றன. இது சமூகத்தின் கட்டுப்பாடு மற்றும் ஆரோக்கியமான ஒற்றுமைக்காக, ஒருவருக்கொருவர் மனிதர்களால் விதிக்கப்பட்ட தண்டனைச் சட்டம் அல்ல. பரிவர்த்தனைச் சட்டங்கள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு மாற வேண்டும். அது வேறொரு விஷயம். சனாதன தர்மம் ஒரு பரிவர்த்தனை தர்மம் அல்ல - இது ஒரு உயிரின் தர்மம்.

நீங்கள் இந்தியராக இருந்தாலும், இந்துவாக இருந்தாலும், இந்து அல்லாதவராக இருந்தாலும் , என்னவாக இருந்தாலும், சனாதன தர்மம் அனைவருக்கும் பொருந்துகிறது.

**தர்மம் என்றால் என்ன?**

"தர்மம்" என்ற வார்த்தையைப் புரிந்துகொள்வோம். தர்மம் என்றால் “விதிமுறைகள்” என்பது பொருள். தர்மம் என்றால் மதம் அல்ல. இந்தக் கலாச்சாரத்தில், மதம் என்றால் என்ன என்று நமக்குத் தெரியாது. உங்கள் வாழ்க்கை சிறந்த முறையில் நிகழ்வதற்கான அடிப்படை விதிமுறைகள் என்ன என்பதை மட்டுமே நாம் பார்க்கிறோம். நீங்கள் இந்த விதிமுறைகளைக் கடைபிடிக்காவிட்டால், உங்கள் வாழ்க்கை நல்லபடியாக நிகழமுடியாது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். இந்த விதிமுறைகள் ஒரு திணிப்பாக இல்லாமல், இருப்பின் அடித்தளமாக இருக்கின்றன. நீங்கள் விதிமுறைகளை அறிந்துகொண்டு, அவற்றுடன் ஒத்துப்போகிறீர்கள் என்றால், உங்கள் வாழ்க்கை சிரமமின்றி நிகழ்கிறது. நீங்கள் அறிந்துகொள்ளாவிட்டால், எந்த காரணமும் இல்லாமல் துன்பமடைய நேரிடும்.

ஒரு இந்து அல்லது ஒரு இந்திய நபர் அல்லது வேறெந்த நபருக்காவது சனாதன தர்மம் உரிமையானதா என்பது முக்கியமல்ல. நீங்கள் எங்கிருந்தாலும், இந்தியராக இருந்தாலும், இந்து மற்றும் இந்து அல்லாதவர் என்று நீங்கள் என்னவாக இருந்தாலும், சனாதன தர்மம் அனைவருக்கும் பொருந்துகிறது, ஏனென்றால் இவை வாழ்வின் அல்லது உயிரின் அடிப்படையான செயல்முறைக்கு வழிகாட்டும் விதிமுறைகள். வேறு எந்த கலாச்சாரமும் இதை இவ்வளவு ஆழமாகப் பார்க்கவில்லை. அந்தப் பெருமிதத்தின் காரணமாக, "இது இந்து சனாதன தர்மம்" என்று நாம் கூறலாம். ஆனால் "இந்து" என்ற வார்த்தையைச் சேர்ப்பதன் மூலம் சனாதன தர்மத்தின் சாத்தியத்தை நாம் குறைத்துவிடுகிறோம். இந்து என்பது ஒரு புவியியல் அடையாளம். இந்து என்பது இமயமலைக்கும், இந்து மகா சமுத்திரத்துக்கும் இடையில் உள்ள நிலப்பரப்பு. சனாதன தர்மம் ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் பொருந்துகிறது. இது இன்னமும் பிறந்திராதவர்கள், பிறந்துவிட்டவர்கள், பெரியவர்கள், இறந்துவிட்டவர்கள், வாழ்வின் வெவ்வேறு கட்டங்கள் மற்றும் வாழ்வின் அனைத்து பரிமாணங்கள் அனைத்தையும் எவ்வாறு கையாள்வது என்பது பற்றிப் பேசுகிறது. இது வாழ்வை மிகவும் ஆழமாக உற்று நோக்குவதற்கான ஒரு வழியாக இருக்கிறது.

**ஸ்மிருதி மற்றும் ஸ்ருதி**

நீங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்திருந்தால், வித்தியாசமாக உடையணிந்துகொண்டு, வேறெதையாவது செய்துகொண்டு இருந்திருப்பீர்கள். நீங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தால், மறுபடியும் வேறு ஏதாவது வித்தியாசமாகச் செய்துகொண்டு இருந்திருப்பீர்கள் - ஒருவேளை

நீங்கள் ஒரு விவசாயியாக அல்லது ஒரு மீனவராக இருந்திருக்கலாம்.

நாம் என்ன செய்கிறோம், எப்படி ஆடை அணிந்திருக்கிறோம், எப்படி பேசுகிறோம், எப்படிச் செயல்படுகிறோம் என்பது காலத்தின்பாற்பட்டது; அது மாறிக்கொண்டே இருக்கிறது. அடுத்த தலைமுறையினர் எப்படி நடந்துகொள்வார்கள், அவர்கள் எப்படி ஆடை அணிவார்கள், என்ன செய்வார்கள் என்பது தற்போது நாம் செய்யும் விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். இது வாழ்வின் ஒரு பரிமாணம் – இதனை நாம் ஸ்மிருதி என்று அழைக்கிறோம். ஸ்மிருதி என்ற சொல்லுக்கு "ஞாபகங்களிலிருந்து" என்ற மொழிபெயர்ப்பு உள்ளது. ஸ்மிருதி என்பது, ஞாபகத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது.

நம் பெற்றோரும், நமது கலாச்சாரமும் செய்த அதே செயலை நாம் செய்கிறோம், அல்லது எதிர்வினையாக, நாம் நேரெதிரான விஷயத்தைச் செய்கிறோம். ஆனால் இது இடையுறாமல் மாறிக்கொண்டிருக்கும் ஒரு செயல்முறையாக இருக்கிறது. தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு மட்டுமல்ல, நம் சொந்த வாழ்க்கையிலேயே, ஒவ்வொரு சில வருடங்களுக்கும், நமது ஸ்மிரிதிகள் மாறிக்கொண்டே இருக்கிறது. நமது தற்போதைய ஞாபகத்திலிருந்தே, நம் வாழ்வின் பல அம்சங்களை நாம் மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

ஸ்மிருதி என்பது, ஒவ்வொரு தலைமுறையும் மறுகண்டுபிடிப்பு அல்லது மறுதிருத்தம் செய்யவேண்டிய ஒன்று. பரிணாமம் என்றால், முந்தைய தலைமுறையை விட சிறப்பாக ஏதாவது செய்ய வேண்டும் என்று அர்த்தமல்ல. அது என்னவென்றால், சூழ்நிலைகள் மாறிக்கொண்டே இருப்பதால், அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நாம் பரிணமிக்கிறோம். சூழ்நிலை சார்ந்த பரிவர்த்தனைகள் எப்போதும் மாற்றமும், பரிணாமமும் அடையவேண்டும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் எப்படி சாப்பிட்டார்களோ, அந்த விதமாக இன்று நாம் சாப்பிட விரும்புவதில்லை, ஏனென்றால் நம் தொழில் வழக்கங்கள் மாறிவிட்டன. நீங்கள் நிலத்தை உழுதுகொண்டிருந்தபோது, என்ன சாப்பிட்டீர்கள், எவ்வளவு சாப்பிட்டீர்கள் என்பதிலேயே பெருத்த வித்தியாசம் இருந்தது. நீங்கள் பலவற்றையும் எப்படிச் செய்கிறீர்கள் என்பது தொடர்ந்து திருத்தப்பட வேண்டும். அரசியலமைப்பில் கூட, முற்றிலும் கேள்விக்கு அப்பாற்பட்ட அடிப்படை உரிமைகள் உள்ளன – நீங்கள் அவற்றைத் தொட முடியாது. மற்ற அனைத்தையும் திருத்தங்களுக்கும், விரிவாக்கங்களுக்கும், அகற்றுதலுக்கும் உட்படுத்த முடியும்.

உங்கள் ஸ்மிருதியும், என் ஸ்மிருதியும் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் ஸ்ருதி என்ற ஒன்று உள்ளது. இதைப் பல்வேறு வழிகளில் விளக்கலாம்; அதனுடைய ஒரு பரிமாணம் என்னவென்றால், அது உயிரின் அல்லது வாழ்வின் ராகமாக இருக்கிறது, இந்த ராகம் உங்களால் உருவாக்கப்படவில்லை – இது படைப்பின் ராகம்.

வாழ்வின் ஸ்ருதியை நீங்கள் புரிந்து கொண்டால் மட்டுமே, அதன் தாளத்தைக் கண்டுபிடிக்க முடியும். பாரத என்பதற்கான பொருள் இதுதான். பா என்றால் பாவ அல்லது வாழ்வின் அனுபவம். ரா என்றால் ராகம், அதாவது வாழ்வின் ஸ்ருதி. த என்றால் தாளம். பாவ என்பது உங்களுக்கு நிகழ்வது – இது ஒரு அனுபவம். ஆனால் ராகம் அல்லது ஸ்ருதி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இப்போது உங்கள் அனுபவத்துக்கான சரியான தாளத்தை நீங்கள் கண்டுபிடிப்பதால் ஒரு அற்புதமான இசை போல வாழ்க்கை அழகாக நிகழ்கிறது. நீங்கள் தாளத்தைக் கண்டுபிடிக்கவில்லை என்றால், வாழ்வை எளிதாக நிகழ்த்தும் அதே ஸ்ருதி, உங்களை நசுக்கிவிடும்.

ஸ்ருதி மாற்றமடைவதில்லை, ஏனென்றால் அது உங்களால் அமைக்கப்படவில்லை – அது படைப்பால் அமைக்கப்பட்டது. எனவே, உங்கள் வாழ்க்கையை நிர்வகிப்பது எது என்று புரிந்துகொண்டு, அதனால் நீங்கள் ஆழமான மற்றும் அழகான வாழ்க்கையை வாழ்வதே, சனாதன தர்மம் எனப்படுகிறது.

**விதிமுறைகளுக்கு ஒத்திசைவாக இருத்தல்**

தனிமனித ஒழுக்கவிதிகள், கட்டளைகள், நீங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது, “இதைச் செய்தால் நீங்கள் சொர்க்கத்துக்குச் செல்வீர்கள். அதைச் செய்தால் நீங்கள் நரகத்திற்குச் செல்வீர்கள்” , என்று இந்தக் கலாச்சாரத்தில் யாரும் பேசுவதில்லை. நீங்கள் விதிமுறைகளுக்கு இசைவாக இருந்தால், உங்களுக்குத் தண்டனையும் தேவையில்லை, வெகுமதியும் தேவையில்லை என்ற இந்தப் பரிமாணத்தைமட்டும் மக்களுக்கு நாம் புகட்டிய காரணத்தினால், நன்னெறிக் கட்டளைகள் எதுவும் இல்லை. அதாவது, நீங்கள் போக்குவரத்து விதிகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப வாகனம் ஓட்டினால், உங்களுக்கு ஒரு போலீஸ்காரர் தேவையில்லை என்பதைப் போன்றதுதான் இது.

தற்போது, இந்த பூமிக்கிரகத்தில் கோடானுகோடி உயிர் வடிவங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது, ஆனால் நீங்கள் இன்னமும் பார்க்காத பல கோடி உயிர் வடிவங்கள் உள்ளன என்றே நான் நினைக்கிறேன். ஒரு நுண்ணுயிரில் இருந்து ஒரு மனிதன் வரைக்கும் மற்றும் இரண்டுக்கும் இடைப்பட்ட அனைத்து உயிரினங்களும்கூட, ஒரே மண்ணிலிருந்துதான் வந்துள்ளனர். ஒரே மண்ணிலிருந்துதான், ஒரு மரம் அல்லது ஒரு கொடி வளர்கிறது. அதே மண்ணிலிருந்து, நீங்கள் சாப்பிட்டதன் விளைவாக, இந்த விதமான உடல் உங்களுக்கு வாய்த்திருக்கிறது. அதே மண்ணிலிருந்து நான் சாப்பிட்டிருக்கிறேன், எனக்கு வேறு விதமான உடல் இருக்கிறது.

நீங்கள் என்னதான் செய்தாலும் உங்களால் ஒரு மரமாக,ஒரு நாயாக, ஒரு பூனையாக, மாடு, யானை அல்லது புலியாக முடியாது. மூலம் ஒன்றுதான், ஆனால் அதன் பன்முக வெளிப்பாட்டைப் பாருங்கள். ஆகவே, அது என்னவாக இருந்தாலும், அதை நிர்வகிக்கக்கூடிய ஒரு விதிமுறை உள்ளது. அது ஒரு ரயில் பாதை போல நிர்ணயிக்கப்பட்டுள்ளது, நீங்கள் அதன் மீது செல்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு வேகமாக, எவ்வளவு தூரம் செல்வீர்கள்?. நாம் விதிமுறையை எவ்வளவு ஆழமாகப் புரிந்து உணர்கிறோம் என்பது மட்டுமல்லாமல் அதனுடன்

நாம் எவ்வளவு ஒத்துப்போகிறோம்? என்பதுதான் நமக்கான ஒரே கேள்வி.

**உங்கள் வாழ்க்கையில் தவறாகப் போகக்கூடிய ஒரே விஷயம்**

அடிப்படையில், ஒட்டுமொத்த யோக அறிவியலும் மற்ற உயிர்களுடன் முழுமையான ஒத்திசைவில் இருப்பதைப் பற்றியே இருக்கிறது. இதனால் உங்கள் வாழ்க்கை ஆனந்தமாகவும், உற்சாகமாகவும், அதன் முழுத் திறனுடனும் நிகழ்கிறது.. உங்கள் வாழ்க்கையில் தவறாகப் போகக்கூடிய ஒரே விஷயம் இதுதான்: உங்கள் உயிரின் முழு வெளிப்பாட்டையும் நீங்கள் காண்கிறீர்களா? இல்லையா? ஒரு மரத்தில் என்ன தவறு இருக்கலாம்? அது அதன் முழுத் திறனுக்கு வளருமா, அல்லது பாதியளவு வளர்ந்த மரமாகவே அது இறந்துபோகுமா? என்பதுதான் ஒரே கேள்வி. மனிதனுக்கும் இதே கேள்வி பொருந்துகிறது. நீங்கள் இயற்கையின் அல்லது பிரபஞ்சத்தின் அல்லது உயிரின் விதிமுறைகளுக்கு இசைவாக இருந்தால், உங்கள் முழு சாத்தியத்துக்கு வளருவீர்கள். இல்லையென்றால், ஏதோ ஒரு விதத்தில் நீங்கள் வளர்ச்சி குன்றியவர்களாகி விடுவீர்கள். மக்கள் இது குறித்த விழிப்புணர்வில் இல்லையென்றாலும்,. அடிப்படையில், இதில் மட்டும்தான் நாம் கவனம் செலுத்துகிறோம். அவர்களின் ஆசைகள், லட்சியங்கள் மற்றும் ஏக்கங்கள் அனைத்தும், ஒரு பூரணத்துவம் அடைந்த உயிராக அல்லது வாழ்க்கையாக மலரும் நோக்கத்தில்தான் இருக்கிறது. நீங்கள் ஒரு முழுமையான உயிராக மாற விரும்பினால், இந்த வாழ்க்கை யாருடைய அடிப்படையில் நிகழ்கிறதோ, அந்த விதிமுறைகளைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

**சனாதன தர்மம் இன்று நீர்த்துப் போய்விட்டதா?**

சனாதன தர்மம் உங்களுக்கோ எனக்கோ சொந்தமில்லை – அது படைப்பு வகுத்தது. அதனுடன் ஒத்திசைவில் இருப்பதுதான் உங்களுக்கும், எனக்கும் உரியது. இங்கே இந்தியாவில், நாம் அதைப் புரிந்துகொண்டு,சட்டங்களாக்கி, ஒரு குறிப்பிட்ட விதமாகத் தொகுத்தோம்.. உலகின் மற்ற பகுதிகளில், இதைப் பற்றி ஒருவரும் அறிந்திருக்கவில்லை என்று இதற்கு அர்த்தமல்ல.. பல தனிப்பட்ட மக்கள் இது பற்றி அறிந்திருந்தனர். அவர்கள் அதை ஸ்ருதி மற்றும் ஸ்மிருதி என்று தொகுத்து எழுதாமல் இருந்திருக்கலாம். ஆனால் உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற மனிதர்கள் அதனுடன் ஒத்திசைவில் இருந்துள்ளனர், ஏனென்றால் எல்லா இடங்களிலும், மனிதர்கள் மலர்ந்து சிறப்பாக வாழ்ந்திருக்கிறார்கள்.

எனவே சனாதன தர்மம் இன்று நீர்த்துப் போய்விட்டதா? என்றால், அதை நீர்த்துப்போகச் செய்வது கூட நம் கைகளில் இல்லை. தனிப்பட்ட புரிதல் நீர்த்துப் போயிருக்கலாம். நபருக்கு நபர், புரிதலின் பரிமாணங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் நீங்கள் சனாதன தர்மத்தை நீர்த்துப்போகச் செய்ய முடியாது, ஏனென்றால் அது உயிரின் அடித்தளமாக இருக்கிறது. நீங்கள் அதை நீர்த்துப்போகச் செய்ய முடியாது, ஏனென்றால் அதனை நீங்கள் உருவாக்கவில்லை.

**– தீபக் குணசேகரன்**

# STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY

## FORM IV ( See Rule 8)

| | |
|---|---|
| 1. Place of publication | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 2. Periodicity | : Monthly |
| 3. Printer Name | : NV SIVASHANKAR |
| (a) Whether Citizen of India | : Yes |
| (b) Nationality | : Indian |
| (c) Address | : J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. |
| 4. Publisher Name | : NV SIVASHANKAR |
| (a) Whether Citizen of India | : Yes |
| (b) Nationality | : Indian |
| (c) Address | : 7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078. |
| 5. Editor Name | : RATHIKA S |

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**


**Dated: 10.11.2022**

**NV SIVASHANAKR**
**Publisher**

# அரசு பள்ளி மாணவர்களை துபாய்க்கு சுற்றுலா அழைத்து சென்ற

# பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்





அரசு பள்ளி மாணவர்கள் 67 பேர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் துபாய்க்கு கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் இணைய வழியில் நடைபெற்ற வினாடிவினா போட்டியில் வெற்றி பெற்ற 67 மாணவமாணவிகளை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் 10.11.2022 அன்று துபாய்க்கு கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். தமிழகம் முழுவ திலிருந்தும் போட்டியில் வெற்றி பெற்ற 11ம் வகுப்பு பயிலும் 33 மாணவிகள், 34 மாணவர்கள் என மொத்தம் 67 பேர் துபாய்க்கு சுற்றுலா சென்றுள்ளனர். ஷார்ஜாவில் நடைபெறும் பன்னாட்டு புத்தக திருவிழாவிற்கும் அழைத்து செல்லப்படுகின்றனர். திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் துபாய் புறப்பட்டு சென்றனர்.

முன்னதாக திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்," நான் இந்த 67 மாணவமாணவிகளுக்கு தாயாகவும், தந்தையாகவும், பாதுகாவலராகவும் இருப்பேன். 5 ஆசிரியர்கள் உள்பட கல்வித்துறை மற்றும் வெளியுறவுத் துறையை சேர்ந்த அதிகாரிகள் உடன் வருகின்றனர். துபாய் செல்வது மாணவர்களுக்கு புது அனுபவமாக இருக்கும்.

மாணவ மாணவிகளின் திறமையை ஊக்குவித்து அரசு சார்பில் அவர்களுக்கு உரிய அங்கீகாரம் பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சுற்றுலாவிற்கு தமிழக அரசிடம் அனுமதி பெற்றுள்ளோம். இது சி.எஸ்.ஆர் நடவடிக்கையின் மூலம் அழைத்துச் செல்லப்படும் சுற்றுலா என்றார்.

**மாநில கல்வி கொள்கை**

மேலும், 10% இட ஒதுக்கீடு பள்ளி கல்வித்துறை மட்டுமல்லாது, பல துறையிலும் கடுமையான பாதிப்புகள் ஏற்படுத்தும். இதுகுறித்து ஆய்வு செய்ய முதல்வர் ஸ்டாலின் ஒரு குழு அமைத்துள்ளார். தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கை பின்பற்றப்படுகிறது என அண்ணாமலை, மத்திய கல்வி அமைச்சர் கூறிய கருத்துக்கு பதிலளித்த அவர், புதிய கல்வி கொள்கையை ஆரம்ப நிலையிலிருந்தே முதலமைச்சர் எதிர்த்து வருகிறார். அதற்காக தான் மாநில கல்வி கொள்கை வகுக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. அதை அவர்கள் தெரிந்து கொண்டு பேச வேண்டும். மாநில கல்வி கொள்கை தயாரிப்பு குழுவின் வரைவு அறிக்கை வந்த பின்பு நாங்கள் எதை பின்பற்றுகிறோம் என்பது தெரியும்.

முதலமைச்சர் பிரதமரை முதல் முறையாக சந்தித்தபோதே தமிழகத்திற்கு நீட் மற்றும் தேசிய கல்விக் கொள்கை தேவை இல்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்து விட்டார். தமிழக மாணவர்களுக்கு எந்த கல்வி முறை வேண்டும் என்பதை ஆணித்தனமாக முதலமைச்சர் பிரதமரிடம் கூறியிருந்தார். இந்த 4 நாட்கள் கல்வி சுற்றுலாவில் நான்தான் இந்த மாணவர்களுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருக்க போகிறேன்" என்றார். அரசு அனுமதியுடன் வெளிநாட்டுக்கு அரசுப் பள்ளி மாணவர்கள் சுற்றுலா அழைத்துச் செல்வது தி.மு.க வரலாற்றில் இது முதன்முறை ஆகும்.

– M. **திலிப் குமார்**




இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன் அவரது துவக்க கால திரைப்படங்களில் இருந்தே உலகம் முழுவதும் கவனிக்கப்பட்டவர். இவரது இயக்கத்தில் அர்னால்ட் ஸ்வாஸ்நேகர் நடித்து 1984இல் வெளியான தி டெர்மினேட்டர் (The Terminator) பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 80களில் யாரும் இம்மாதிரி ஒரு படத்தை கற்பனைகூட செய்து பார்த்திருக்கவில்லை.

அதற்கடுத்ததாக அவர் இயக்கிய ஏலியன்ஸ், தி அபிஸ் (The Abyss) ஆகிய படங்கள் திரைப்பட ரசிகர்களை அதிரவைத்தன. குறிப்பாக தி அபிஸ் படத்திற்காக அவர் எடுத்துக்கொண்ட களம் பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. இதற்குப் பிறகு வெளிவந்த டெர்மினேட்டர் 2: ஜட்ஜ்மென்ட் டே (Terminator 2: Judgment Day), ட்ரூ லைஸ் (True Lies) ஆகிய படங்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இதற்குப் பிறகுதான் உலகையே திரும்பிப் பார்க்க வைத்த டைட்டானிக் திரைப்படம் வெளிவந்தது. இந்தத் திரைப்படம் எடுத்துக்கொண்டிருந்த காலகட்டத்திலேயே உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இந்தப் படம் குறித்த செய்திகள் வெளியாகின. படம் வெளியாகும்போது, உலகம் முழுவதும் படம் தொடர்பான எதிர்பார்ப்பு உச்சகட்டத்தை எட்டியிருந்தது.

ஜேம்ஸ் கேமரூனின் ஒரு படத்திற்கும் அடுத்த படத்திற்கும் இடையில் வழக்கமான இடைவெளியைவிட அதிக இடைவெளி இருப்பது வழக்கம்தான். ஆனால், டைட்டானிக் படத்திற்கும் அதற்கடுத்த படத்திற்கும் இடையில் கிட்டத்தட்ட 12 ஆண்டு இடைவெளி எடுத்துக்கொண்டார். டைட்டானிக் படம் 1997இல் வெளிவந்தது. இதற்கு அடுத்த படம் 2009இல் வெளிவந்தது. அந்தப் படம் வெளிவந்தபோது, அவர் அவ்வளவு இடைவெளி எடுத்துக்கொண்டதற்கான காரணம் புரிந்தது.

அந்தப் படம் அவதார். இயற்கைக்கும் மனித ஆக்கிரமிப்பிற்கும் இடையிலான போராட்டத்தைச் சொல்லும் வகையில் இந்தப் படம் உருவாக்கப்பட்டிருந்தது. 2009ஆம் ஆண்டு டிசம்பர் 16 முதல் 18ஆம் தேதிக்குள் உலகம் முழுவதும் சுமார் 14,600 திரையரங்குகளில் இந்தப் படம் வெளியானது. அவற்றில் 3,670 திரையரங்குகளில் முப்பரிமாண தொழில்நுட்பத்தில் இந்தப் படம் திரையிடப்பட்டது. 260 திரையரங்குகளில் ஐமேக்ஸ் தொழில்நுட்பத்தில் படம் வெளியானது.

மிகப் பெரிய வெற்றிப்படமாக அமைந்த அவதார், உலகம் முழுவதும் 2.92 பில்லியன் டாலர்களை வசூலித்தது. பணவீக்கத்தோடு இந்தத் தொகையை ஒப்பிட்டால், உலகில் இதுவரை வெளியான திரைப்படங்களில் கான் வித் தி விண்ட் (Gone With the Wind) திரைப்படத்திற்கு அடுத்தபடியாக அதிக வசூலைப் பெற்ற படமாக அவதார் இருக்கிறது.

இந்தப் படம் வெற்றியடைந்த பிறகு, அவதார்: தி வே ஆஃப் வாட்டர் (Avatar: The Way of Water), அவதார் மூன்றாம் பாகம் என மேலும் இரு பாகங்கள் வரும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது மொத்தமாக நான்கு பாகங்கள் வெளியாகுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் பாகம் இந்த ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதியும் மூன்றாம் பாகம் 2024 டிசம்பர் 20ஆம் தேதியும் நான்காம் பாகம் 2026ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதியும் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அவதார்:** தி வே ஆஃப் வாட்டர் படத்தைப் பொறுத்தவரை 2014ஆம் ஆண்டே வெளியாகுமென




எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தண்ணீருக்கடியில் நடிகர்களின் நடிப்புகளைப் பதிவு செய்து அதை அவதார் கதாபாத்திரங்களாக வடிவமைக்கப் பயன்படும் பெர்ஃபாமன்ஸ் கேப்ச்சுர் (Performance Capture) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி படம் பிடிப்பது, படப்பிடிப்பிற்குப் பிந்தைய பணிகளில் ஏற்பட்ட தாமதம் ஆகியவற்றால் இப்போதுதான் இந்தப் படம் வெளியீட்டிற்குத் தயாராகியுள்ளது. சுமார் 250 மில்லியன் டாலர்கள் செலவில் இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

முதல் படத்தைப் போலவே, ஜாக் சாலியும் நேத்ரியும் இணைந்து தங்களது உலகமான பண்டோராவை காக்க நடத்தும் போராட்டம்தான் இந்தப் படத்திலும் கதை. ஆனால், பெரும்பாலான காட்சிகள் நீருக்கடியில் நடப்பதுதான் வித்தியாசம்.

ஜேம்ஸ் கேமரூனின் படங்கள் துவக்கத்திலிருந்தே, இயற்கைக்கும் நவீன மனிதனுக்கும் இடையிலான உறவு, முரண்பாடு ஆகியவற்றைத் தொடர்ந்து சித்தரித்து வந்திருக்கின்றன. அதன் உச்சகட்டமாகத்தான் அவதார் வெளிவந்தது. இப்போது, இந்த இரண்டாவது பாகத்தில் இயற்கையின் ஒரு பகுதியான கடலுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாம் வொர்திங்டன், ஜோ சல்தானா போன்ற முந்தைய பாகத்தில் நடித்த நடிகர்களோடு, கேட் வின்ஸ்லேட் போன்றவர்களும் இந்தப் படத்தில் நடித்துள்ளார்கள். முந்தைய படத்திற்கு இசையமைத்த ஜேம்ஸ் ஹார்னரே இந்தப் படத்திற்கும் இசையமைப்பார் எனக் கூறப்பட்டிருந்தது. ஆனால், அவர் 2015இல் ஒரு விமான விபத்தில் இறந்துவிட்ட நிலையில், சிமோன் ஃப்ராங்க்லன் இதற்கு இசைமைத்துள்ளார்.

3 மணி நேரம் 10 நிமிடங்களுக்கு இந்தப் படம் ஓடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் வெளியாகியுள்ள இரண்டாம் பாகத்தின் டிரெய்லரில் காட்டப்பட்ட பிரமாண்டம் உலகளவில் அவதார் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

– P. **அஷோக் குமார்**

---

**உன் வாழ்க்கை உன் கையில்**

" அரசாங்கம் நினைக்கிறது
அவர்களுக்கு நீ ஒரு
"வருவாய் " என்று...!

உன் குடும்பம்
காத்திருக்கிறது நீ வீட்டிற்கு
" வருவாய் " என்று...!









**Printed by NV SIVASHANKAR and Published by NV SIVASHANKAR on behalf of PENA KURAL, Tamil Monthly and Printed at J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: RATHIKA S.**



வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ம் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.


30 NOVEMBER 2022
பாசமிகு
தலைவனுக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. K.P.கந்தன் Ex.MLA.,
சென்னை புறநகர் மாவட்ட கழக செயலாளர்
வி.சந்தோஷ் குமார்
184(மே) வட்டக் கழக பொறுப்பாளர், தகவல் தொழில்நுட்ப பிரிவு